بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

இதழ் 27

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

27 துல் கஃதா 1442 ஹிஜ்ரி கமரி 08 வஃபா 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 08 ஜூலை 2021


## அல்லாஹ்வின் கட்டளை

إِنَّ الَّذِينَ كَفَرُوا لَوْ أَنَّ لَهُمْ مَّا فِي الْأَرْضِ جَمِيعًا وَّمِثْلَهُ مَعَهُ لِيَفْتَدُوا بِهِ مِنْ عَذَابِ يَوْمِ الْقِيَامَةِ مَا تُقُبِّلَ مِنْهُمْ ۖ وَلَهُمْ عَذَابٌ أَلِيمٌ

நிராகரிப்பவர்களிடம் பூமியிலுள்ள எல்லாமும் இருந்து, அதைப்போல் இன்னொரு பங்கும் அவர்களிடம் இருந்து அவற்றை அவர்கள் மறுமை நாளின் தண்டனைக்கு ஈடாகக் கொடுத்தாலும் அவை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடி தண்டனை உள்ளது. (5:37)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் எப்படிப்பட்ட உண்மை மற்றும் நன்றியுணர்விற்கான முன்னுதாரணங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றால் உலக வரலாற்றில் அதற்கு உதாரணம் கிடைக்க முடியாது. நான் பார்க்கின்றேன். அல்லாஹ் எனது ஜமாஅத்திற்கும் ஓர் உத்வேகத்தை வழங்கியுள்ளான். மேலும் அவர்கள் நன்றியுணர்வு மற்றும் உண்மையின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்துகின்றனர்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### கலப்பற்ற மற்றும் நன்றியுணர்வு கொண்ட ஒரு ஜமாஅத்

நான் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். அவன் எனக்கு ஒரு கலப்பற்ற நன்றியுணர்வுமிக்க ஜமாஅத்தை வழங்கியுள்ளான். நான் பார்க்கின்றேன். எந்த பணி மற்றும் நோக்கத்தை நான் அவர்களிடம் கூறுகின்றேனோ அதனை மிகவும் வேகத்துடனும், துடிப்புடனும் ஒருவர் மற்றவரை முந்திக் கொண்டு தமது தைரியம் மற்றும் நற்பேறுக்கேற்ப அதில் முன்னேறுகின்றனர். மேலும் நான் அவர்களிடத்தில் ஓர் உண்மையும், கலப்பற்றத் தன்மையும் இருப்பதை நான் பார்க்கின்றேன். என் புறமிருந்து ஒரு விவகாரத்திற்கு சைகை கிடைத்தால் அவர்கள் அதனை செய்து முடிக்க தயாராகி விடுகின்றனர். உண்மையில் தனது இமாமிற்கு கட்டுப்படுவதிலும் அவரைப் பின்தொடர்வதிலும் இதுபோன்ற உத்வேகம், கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வை ஏற்படுத்திக் கொள்ளாதவரை உண்மையில் எந்தவொரு சமுதாயமும், ஜமாஅத்தும் தயாராக முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்களையும், துன்பங்களையும் சந்திக்க நேரிட்டதோ அதற்கெதிரில் அன்னாரின் ஜமாஅத் பலவீனமானதாகவும், தைரியமற்றதாகவும் இருந்தது. உதாரணமாக, அன்னார் கைது செய்யப்பட்டபோது சீடர்களில் பெரியவரான பேதுரு தனது எஜமானர் மற்றும் தலைவருக்கு முன்பே (அவரை) மறுதலித்து விட்டார். அவர் மறுதலிக்க மட்டும் செய்யவில்லை. மாறாக, மூன்று முறை சாபமிட்டார். பெரும்பாலானவர்கள் அவரை விட்டு விட்டு ஓடிவிட்டனர். இதற்கெதிரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் எப்படிப்பட்ட உண்மை மற்றும் நன்றியுணர்விற்கான முன்னுதாரணங்களை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்றால் உலக வரலாற்றில் அதற்கு உதாரணம் கிடைக்க முடியாது. நான் பார்க்கின்றேன். அல்லாஹ் எனது ஜமாஅத்திற்கும் ஓர் உத்வேகத்தை வழங்கியுள்ளான். மேலும் அவர்கள் நன்றியுணர்வு மற்றும் உண்மையின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்துகின்றனர்.

அன்னார் (ஸல்) அவர்களின் சஹாபிகள் எல்லா வகையான துன்பங்களையும் சுமப்பதை எளிதாக கருதினர். எந்த அளவுக்கென்றால் அன்பிற்குரிய தேசத்தை துறந்தனர். தமது சொத்து, சொந்தம், பந்தம் ஆகிய அனைத்தையும் பிரிந்தனர். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உயிரை வழங்குவதற்கு தாமதிக்கவும் இல்லை; வேதனைப்படவும் இல்லை. இதே உண்மை மற்றும் நன்றியுணர்வு தான் அவர்களை இறுதியில் வெற்றி பெறச் செய்தது. இதேபோன்று இப்போது நான் பார்க்கின்றேன். அல்லாஹ் எனது ஜமாஅத்திற்கும் அதே அளவிற்கு அதன் தகுதி மற்றுமம் அந்தஸ்திற்கேற்ப ஓர் உத்வேகத்தை வழங்கியுள்ளான். மேலும் அவர்கள் நன்றியுணர்வு மற்றும் உண்மைக்கான முன்னுதாரணத்தை காட்டுகின்றனர். நான் நஸீபைனை நோக்கி ஒரு ஜமாஅத்தை அனுப்புவதற்கு எண்ணம் கொண்ட நாள் முதல் அந்த தொண்டில் ''தான்'' நியமிக்கப்பட வேண்டும் என ஒவ்வொரு நபரும் முயற்சி செய்கின்றார். மேலும் அவருடைய இடத்தில் நான் அனுப்பப்படக்கூடாதா? என்று மற்றவரை ஏக்கத்துடன் பார்க்கின்றார். அவ்வாறு அனுப்பப்பட்டிருந்தால் அது நனது பெரும் நற்பேறாக இருக்கும் என்று ஆசை கொள்கின்றார். ஏராளமான நபர்கள் அந்த பயணத்தில் செல்வதற்கு தங்களை முன்னிறுத்தி உள்ளனர். நான் அந்த விண்ணப்பங்களில் முதலில் மிர்ஸா ஹுதா பக்ஷ் சாஹிப் அவர்களை அந்த பயணத்திற்கு தேர்ந்தெடுத்து விட்டேன். மேலும் மவ்லவி குதுபுத்தீன் மற்றும் மியான் ஜமாலுத்தீன் ஆகியோரை அன்னாருடன் அனுப்புவதற்கு ஏற்கனவே திட்டமிட்டு விட்டேன். எனவே மற்ற நபர்களின் விண்ணப்பங்களை திருப்பி அனுப்ப வேண்டியதிருந்தது. ஆயினும் நான் நன்கு அறிவேன். எந்த மக்கள் வாக்குறுதியை முழுமையாக பேணுவதற்காகவும், உண்மையான கலப்பற்ற தன்மையுடனும் தங்களை இந்தத் தொண்டிற்காக முன்னிறுத்தினார்களோ அவர்களின் தூய எண்ணங்களுக்குரிய கூலியை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். அவர்கள் தமது கலப்பற்ற தன்மைக்கேற்ப நற்கூலியை பெற்றுக் கொள்வார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 306, 307 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### *நபிமொழி*

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மக்கள் ஒரு ஜனாஸாவை கடந்து சென்றனர். மேலும் அந்த ஜனாஸாவை (மரணித்தவரை) மிகவும் புகழ்ந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடமையாகி விட்டது என்று கூறினார்கள். பின்னர் மற்றொரு ஜனாஸாவை கடந்து சென்றனர். அவர்கள் அவரை (அந்த ஜனாஸாவை) பழித்துரைத்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கடமையாகிவிட்டது என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் என்ன விஷயம் கடமையாகிவிட்டது? என்று கேட்டார்கள். எவரை நீங்கள் புகழ்ந்தீர்களோ அவருக்கு சொர்க்கம் கடமையாகிவிட்டது. எவரை (எந்த ஜனாஸாவை) நீங்கள் பழித்தீர்களோ அவருக்கு நெருப்பு கடமையாகி விட்டது. நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் சாட்சியம் ஆவீர்கள் என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி 3 ஹதீஸ் எண் 1367, கிதாபுல் ஜனாயிஸ், 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உலகில் அனைத்து விஷயங்களையும் விடவும் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய ஒரு சூரா இறங்கியுள்ளது என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் ஃபத்ஹ் அதிகாரத்தின் வசனங்களை திலாவத் செய்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த உடன்படிக்கை உண்மையிலேயே இஸ்லாத்திற்கு வெற்றியா? என்று கேட்டார்கள். ஆம்! நிச்சயமாக இது நமக்கு வெற்றியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**ஹுதைபியா உடன்படிக்கையின்போது முஸ்லிம்கள் மற்றும் நிராகரிப்பவர்களுக்கிடையே நடந்த ஒப்பந்தத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கையொப்பமிட்டார்கள்.**

**பனூ முஸ்தலிக் போர் நாளன்று தொழுகை கஸா செய்யப்பட்டதாக கூறும் அறிவிப்பு பற்றிய விளக்கம்.**

**மர்ஹூம்களின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 மே 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **28 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாக்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வந்தது. மேலும் அன்னார் பங்கு பெற்றிருந்த போர்களைப் பற்றியும் கூறப்பட்டிருந்தது. ஹம்ராவுல் அஸத் என்ற போரைப் பற்றி இவ்வாறு வருகிறது. உஹது போருக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வந்தார்கள். நிராகரிப்பாளர்கள் மக்காவிற்கு திரும்பினார்கள். ஆனால் குரைஷியர்கள் மீண்டும் போர் தொடுத்திருப்பதாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தோழர்களுடன் ஹம்ராவுல் அஸத் என்ற இடத்திற்கு சென்றார்கள். ஹம்ராவுல் அஸத் என்பது மதீனாவிலிருந்து 8 மைல் தொலைவிலுள்ள ஓர் இடமாகும்.

இந்த போரைப் பற்றி ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியதிலிருந்து சிறிய பகுதியை எடுத்து வைக்கின்றேன். அன்னார் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: வெளிப்படையில் குரைஷிய படைகள் மக்காவிற்கு (திரும்பி) சென்று கொண்டிருந்தன. எனினும் அவர்களின் இந்த செயல் முஸ்லிம்களை கவனமிழக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினாலும் இருக்குமோ என்ற அச்சம் இருந்தது. மேலும் திடீரென திரும்பி வந்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து விடக்கூடும் என்ற அச்சம் இருந்தது.

எனவே அந்த இரவில் மதீனாவில் பாதுகாப்பிற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வீட்டிற்கு இரவு முழுவதும் சஹாபிகள் சிறப்பான முறையில் பாதுகாப்பு கொடுத்தனர். காலை விடிந்ததும், இந்த அச்சம் வெறும் சந்தேகத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவில்லை என்பது தெரிய வந்தது. ஏனென்றால் குரைஷிய படைகள் மதீனாவிலிருந்து சில மைல் தூரம் சென்று தங்கி விட்டதாகவும் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. இந்த வெற்றியிலிருந்து பயனடைந்தவாறு நாம் ஏன் மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்கக்கூடாது? என்று சில குரைஷிகள் ஒருவர் மற்றவர் மீது பழிசுமத்திக் கொண்டதாகவும் தகவல் கிடைத்தது. மேலும் நீங்கள் முஹம்மத் (ஸல்) அவர்களை கொலை செய்யவும் இல்லை; முஸ்லிம் பெண்களை அடிமைகளாக ஆக்கிக் கொள்ளவும் இல்லை. மேலும் அவர்களின் செல்வங்களை நீங்கள் அபகரித்துக் கொள்ளவும் இல்லை. இன்னும் கூறப்போனால் அவர்களை நீங்கள் வெற்றி கொண்ட போது அவர்களை அடிப்பதற்கு உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அவர்கள் மீண்டும் வலிமை பெற்று விடுகின்ற அளவிற்கு நீங்கள் அவர்களை விட்டு விட்டு வந்து விட்டீர்கள் என்றெல்லாம் குரைஷியர்கள் ஒருவர் மற்றொருவரை கடிந்து கொண்டனர்.

எனவே இப்போதும் சந்தர்ப்பம் உள்ளது. திரும்பி செல்லுங்கள். மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்து முஸ்லிம்களின் வேரை வெட்டி விடுங்கள். மேலும் அவர்களின் ஒரு பிரிவினர், என்ன நடந்ததோ அதை நல்லதாக கருதுங்கள். மக்காவிற்கு திரும்பிச் சென்று விடுங்கள் என்று கூறினர். இல்லையென்றால் போரில் வெற்றி பெற்றதாக கிடைத்திருக்கும் இந்த சிறிய அளவிலான புகழையும் நீங்கள் இழந்து விடுவீர்கள். மேலும் இந்த வெற்றி தோல்வியாக மாறி விடும் என்றும் கூறினர்.

ஆனால் இறுதியில் உணர்வுப்பூர்வமான மக்களின் கருத்து மேலோங்கியது. மேலும் குரைஷிகள் மதீனாவை நோக்கி திரும்புவதற்கு தயாராகி விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவங்களைப் பற்றி தகவல் கிடைத்தவுடன் முஸ்லிம்களை தயாராகும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே அறிவிப்பு செய்தார்கள். மேலும் அத்துடன் உஹது போரில் கலந்து கொண்டவர்களை தவிர்த்து வேறு எவரும் எம்முடன் புறப்பட வேண்டாம் என்ற கட்டளையையும் வழங்கினார்கள்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 346 ஹம்ரவுல் அஸத், பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 504, 505)

இந்த ஓர் அறிவிப்பும் ஒரிடத்தில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு குரைஷிகளின் இந்த ஆலோசனைப் பற்றி தகவல் கிடைத்தவுடன்அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களுக்கு இந்த விஷயத்தைப் பற்றி தகவல் கொடுத்தார்கள். எதிரிகளை பின்தொடர்ந்து செல்ல வேண்டும் என்று அவர்கள் இருவரும் ஆலோசனை வழங்கினர்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 278 கஸ்வா உஹது, 2013 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

எனவே உஹது போரில் கலந்து கொண்ட முஜாஹித்களில் பெரும்பாலார் காயமுற்றிருந்தனர். அவர்கள் தங்களது காயங்களின் மீது கட்டுப் போட்டுக் கொண்டு தனது எஜமானருடன் புறப்பட்டு விட்டார்கள். மேலும் அந்த சந்தர்ப்பத்தில், ஒரு வெற்றி பெற்ற படை வெற்றிக்குப் பிறகு எதிரியை பிடிக்க புறப்படுவதுபோன்று முஸ்லிம்கள் மகிழ்ச்சியுடனும், உத்வேத்துடனும் புறப்பட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. எட்டு மைல் தொலைவை கடந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹம்ராவுல் அஸத் என்ற இடத்தை அடைந்தார்கள். அப்போது மாலை நேரம் ஆகி இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு தங்குவதற்கு கட்டளையிட்டார்கள். மேலும் மைதானத்தில் பல்வேறு இடங்களில் நெருப்பை மூட்டுமாறு கூறினார்கள். எனவே ஹம்ராவுல் அஸத் மைதானத்தில் கண் மூடி திறப்பதற்குள் 500 நெருப்பு ஜுவாலைகள் மூட்டப்பட்டன. தொலைவிலிருந்து பார்க்கக்கூடிய ஒவ்வொருவரின் உள்ளத்தையும் அது ஈர்க்கக்கூடியதாக இருந்தது.

அநேகமாக அதே சந்தர்ப்பத்தில் கஸாஆ கோத்திரத்தின் ஒரு தலைவர் அவர் பெயர் மஃபத் ஆகும். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் வந்து நின்றார். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் உஹது போரில் கொலை செய்யப்பட்டவர்களுக்காக தமது இரங்கலையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார். பின்னர் தமது வழியில் அவர் புறப்பட்டு விட்டார். பின்னர் இரண்டாம் நாள் அவர் ரவ்ஹா என்ற இடத்தை அடைந்தபோது அங்கு குரைஷிய படைகள் தங்கியிருப்பதை அவர் கண்டார். மேலும் மதீனாவை நோக்கி திரும்பிச் செல்வதற்கு தயாராகிக் கொண்டிருப்பதையும் அவர் கண்டார். மஃபத் உடனடியாக அபூ சுஃப்யானிடம் சென்றார். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டார்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தற்போது முஹம்மத் (ஸல்) அவர்களின் படையை ஹம்ராவுல் அஸதில் பார்த்து விட்டு வந்துள்ளேன். இதுபோன்ற திகில்மிக்க படையை ஒருபோதும் நான் கண்டதில்லை. உஹது போரில் அவர்களுக்கு ஏற்பட்ட பின்னடைவால் அவர்களிடம் எந்த அளவுக்கு உத்வேகம் காணப்படுகின்றது என்றால் அவர்கள் உங்களைப் பார்த்ததும், சாம்பலாக்கி விடுவார்கள். அபூசுஃப்யான் மற்றும் அவரது தோழர்கள் மீது மஃபதின் இந்த கூற்றுகள் எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பிச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை கைவிட்டு விட்டு உடனடியாக மக்காவிற்கு திரும்பி விட்டார்கள்.

குரைஷிகளின் படை இவ்வாறு ஓடி விட்ட தகவல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனுக்கு நன்றி கூறினார்கள். மேலும் இது நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் சூழ்ந்து கொண்ட இறைவனின் திகில் ஆகும் என்று அன்னார் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹம்ராவுல் அஸதில் இரண்டு, மூன்று நாட்கள் வரை மேலும் தங்கினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 504, 505)

பனூ முஸ்தலிக் போர் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் நிகழ்ந்தது. அதனை முர்யுஸய் போர் என்றும் கூறுவார்கள். அதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

குரைஷிகளின் எதிர்ப்பு நாளுக்கு நாள் அபாயகரமான நிலையை அடைந்து கொண்டே சென்றது. அவர்கள் தங்களது மறைவான திட்டங்களால் அரபு நாட்டின் ஏராளமான கோத்திரங்களை இஸ்லாம் மற்றும் இஸ்லாத்தின் தோற்றுனருக்கு எதிராக எழுந்து நிற்கச் செய்து விட்டார்கள். ஆனால் தற்போது அவர்களின் பகைமை ஒரு புதிய அபாயத்தை ஏற்படுத்தியது. அது என்னவென்றால், முஸ்லிம்களுடன் நல்ல தொடர்பை வைத்திருந்த ஹிஜாஸ் கோத்திரமும், குரைஷிகளின் குழப்பமான நடவடிக்கைகளால் முஸ்லிம்களுக்கு எதிராக எழுந்து நிற்கத் தொடங்கியது. இந்த விவகாரத்தில் முந்தக்கூடிய பிரபலமான கோத்திரமாக பனூ குஸாஆ இருந்தது. அதனுடைய ஒரு கிளையான பனூ முஸ்தலிக் கோத்திரம் மதீனாவிற்கு எதிராக தாக்குதல் நடத்த தயாராகி இருந்தது. மேலும் அவர்களின் தலைவன் ஹாரிஸ் பின் அபி ஸிரார் அந்த பகுதியிலுள்ள ஏனைய கோத்திரத்திற்கு சுற்றுப் பயணம் செய்து வேறு சில கோத்திரங்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தகவல் கிடைத்தபோது அன்னார் (ஸல்) அவர்கள் முன்னெச்சரிக்கையாக தனது ஒரு நபித்தோழரான ஹுரைா பின் குஸைத் என்பவரை நிலைமையை அறிந்து வருவதற்காக பனூ முஸ்தலிக்கை நோக்கி அனுப்பி வைத்தார்கள். மேலும் மிக விரைவாக திரும்பி வந்து உண்மையான நிலவரத்தை தமக்கு தெரிவிக்கும்படியும் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். புரைரா அவர்கள் சென்றார்கள். அப்போது உண்மையிலேயே ஒரு பெரும் கூட்டம் அங்கு இருப்பதை அன்னார் கண்டார்கள். மேலும் அவர்கள் மிகவும் வேக வேகமாக மதீனாவின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு தயாராகிக் கொண்டிருப்பதையும் அன்னார் கண்டார்கள். அன்னார் உடனடியாக திரும்பி வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் தகவல் கொடுத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழக்கம்போல் முஸ்லிம்களுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பனூ முஸ்தலிக் நகரத்தை நோக்கி புறப்படுமாறு கூறினார்கள்.

ஏராளமான சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் புறப்படுவதற்கு ஆயத்தமானார்கள். ஆனால் இதற்கு முன்பு ஒருபோதும் இத்தனை எண்ணிக்கையில் கலந்து கொண்டிராத நயவஞ்சகர்களின் ஒரு பெரும் கூட்டமும் புறப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் அபூ ஸர் கஃப்பாரி (ரலி) அவர்களை அல்லது வேறு சில அறிவிப்புகளில் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மதீனாவின் அமீராக நியமனம் செய்து அல்லாஹ்வின் பெயரை கூறியவாறு ஷஃபான் மாதம் ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டார்கள். படையில் 30 குதிரைகள் மட்டுமே இருந்தன. எனினும் ஒட்டகங்களின் எண்ணிக்கை ஓரளவிற்கு அதிகம் இருந்தது. இதே குதிரைகள் மற்றும் ஒட்டகங்களில் அனைவரும் இணைந்து ஒவ்வொருவராக சவாரி செய்து முஸ்லிம்கள் சென்றனர். வழிப்பாதையில் நிராகரிப்பாளர்களின் ஓர் ஒற்றன் முஸ்லிம்களிடம் சிக்கினான். அவனை அவர்கள் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜர்படுத்தினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவன் உண்மையிலேயே ஒற்றன் ஆவான் என்பதை விசாரித்த பிறகு அவனிடம் நிராகரிப்பாளர்கள் பற்றி சில நிலவரங்களையும் அறிந்து கொள்ள விரும்பினார்கள்.

ஆனால் அவன் கூற மறுத்து விட்டான். மேலும் அவனது நடவடிக்கை சந்தேகத்திற்குரியதாக இருந்ததாலும் அப்போது நடைமுறையிலிருந்த போர் சட்டத்திற்கேற்பவும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனை கொலை செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு இஸ்லாமிய படை முன்னோக்கி சென்றது. பனூ முஸ்தலிக் கோத்திரத்திற்கு முஸ்லிம்களின் வருகையைப் பற்றிய செய்தி கிடைத்தது. மேலும் அவர்களின் ஒற்றன் கொல்லப்பட்டு விட்டான் என்ற செய்தியும் அவர்களுக்கு கிடைத்தது. அப்போது அவர்கள் மிகவும் அச்சமுற்றார்கள். ஏனென்றால் எப்படியாவது மதீனாவின் மீது திடீரென தாக்குதல் நடத்த சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும் என்பதே அவர்களின் அசல் நோக்கமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விழிப்புணர்வான நடவடிக்கையின் காரணமாக அவர்கள் சிக்கிக் கொண்டனர்.

எனவே அவர்கள் மிகவும் பதற்றமடைந்து விட்டனர். அவர்களின் உதவிக்காக அவர்களுடன் இணைந்திருந்த ஏனைய கோத்திரங்கள். இறை வல்லமையின் காரணமாக எந்த அளவிற்கு அச்சத்திற்கு ஆளானார்கள் என்றால் உடனடியாக அவர்களை விட்டு விட்டு தத்தமது வீடுகளுக்கு திரும்பி விட்டனர். ஆனால் குரைஷிகள் பனூ முஸ்தலிக் கோத்திரத்திற்கு சுயமே முஸ்லிம்களுக்கெதிரான பகைமை உணர்வு எனும் போதையை எந்த அளவிற்கு ஊட்டியிருந்தார்கள் என்றால் அவர்கள் அதற்குப் பிறகும் போரின் எண்ணத்திலிருந்து விலகவில்லை. மேலும் முழுமையான

தயாரிப்புடன் இஸ்லாமிய படையை எதிர்கொள்வதற்கு தயாராகி விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முர்ஸயீ என்ற இடத்தை அடைந்தபோது (அந்த இடத்திற்கு அருகில் பனூ முஸ்தலிக் தங்கியிருந்தனர். மேலும் அந்த இடம் கடற்கரை ஓரத்திற்கு அருகில் மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையில் அமைந்திருந்த ஓர் இடமாகும்). ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு முகாமிடுவதற்கு கட்டளையிட்டார்கள். அணி வகுக்கப்பட்டது. மேலும் கொடிகள் பங்கிட்டு கொடுக்கப்பட்டன. இதுபோன்ற பணிகளுக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முன்னால் சென்று பனூ முஸ்தலிக் கோத்திரத்தாரிடம் இவ்வாறு அறிவிக்கும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள்:

இப்போதும் கூட இஸ்லாத்தின் மீதான பகைமையிலிருந்து விலகி விட்டால் மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சியை ஒப்புக் கொண்டு விட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும். மேலும் முஸ்லிம்கள் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று அறிவிக்கும்படி ஹஸ்ரத் நபிகம் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். ஆனால் அவர்கள் கடுமையாக மறுத்து விட்டார்கள். மேலும் போர் செய்வதற்கு தயாராகி விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் போரில் அந்த கோத்திரத்தைச் சார்ந்த ஒரு மனிதரே முதல் அம்பு எய்தார் என்று எழுதப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்நிலையை கண்டபோது அன்னார் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு போரிடுமாறு கட்டளையிட்டார்கள். எதிரிகளும் மற்றவர்களும் தான் போரை துவங்கி இருந்தார்கள். சிறிது நேரம் வரை இரு தரப்புக்கு இடையிலும் மிக அதிகமாக அம்புகளால் சண்டையிடப்பட்டது. அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திடீரென தாக்குதல் தொடுக்கும்படி சஹாபிகளுக்கு கட்டளையிட்டார்கள்.

அந்த திடீர் தாக்குதல்களின் விளைவாக நிராகரிப்பாளர்களின் பாதங்கள் தடுமாறி விட்டன. ஆயினும் முஸ்லிம்கள் எவ்வளவு புத்திசாலித்தனத்துடன் அவர்களை சுற்றி வளைத்தார்கள் என்றால் முழு சமுதாயமும் சுற்றி வளைக்கப்பட்டு ஆயுதங்களை வீசும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி விட்டது. மிகவும் அபாயகரமான நிலைமையாக மாற இருந்த போரானது வெறும் 10 நிராகரிப்பாளர்கள் மற்றும் ஒரு முஸ்லிமின் கொலையோடு முடிவுக்கு வந்து விட்டது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தில் எழுதுகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இதனை குறிப்பிடுவது அவசியமாகும். இதேபோரைப் பற்றி சஹீஹ் புகாரியில் ஓர் அறிவிப்பு இவ்வாறு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் மீது எப்படிப்பட்ட நேரத்தில் தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் அவர்கள் கவனக்குறைவின் நிலையில் தமது விலங்குகளுக்கு தண்ணீர் குடிக்கச் செய்து கொண்டிருந்தனர். ஆயினும் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டால் இந்த அறிவிப்பு வரலாற்று ஆய்வாளர்களின் அறிவிப்பிற்கு எதிரானதாக இல்லை. மாறாக இது உள்ளபடியே இரண்டு வேறுபட்ட பல்வேறு நேரங்களுடன் தொடர்புடைய அறிவிப்பாக உள்ளது என்பது தெரிய வரும்.

அதாவது சம்பவம் இதுவாகும். இஸ்லாமிய படை பனூ முஸ்தலிக்கை நெருங்கியபோது அதாவது அப்போது முஸ்லிம்கள் மிகவும் அருகில் வந்து விட்டனர் என்பதை அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர். (இஸ்லாமிய படை வருகின்றது என்பது அவர்களுக்கு நிச்சயம் தகவல் கிடைத்திருந்தது). அவர்கள் நிம்மதியுடன் ஆயத்தமற்ற நிலையில் இருந்தனர். இதே நிலையைக் குறித்து தான் புகாரி அறிவிப்பிலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லிம்கள் வந்தடைந்த தகவல் கிடைத்தபோது அவர்கள் தங்களது முந்தைய மற்றும் எதிர்கால தயாரிப்பிற்கேற்ப உடனடியாக வரிசையாக அணிவகுத்து எதிர்த்து போரிடுவதற்கு தயாராகி விட்டார்கள். வரலாற்று ஆய்வாளர்கள் இந்த நிலையைப் பற்றி தான் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த கருத்து வேறுபாட்டிற்கு அல்லாமா இப்னு ஹிஜ்ர் மற்றும் ஏனைய சில ஆராய்ச்சியாளர்களும் இதே விளக்கத்தை தான் வழங்கியுள்ளார்கள். மேலும் இதுவே சரியானதாகவும் தெரிகின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 557–559)

பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வந்தபோது வேறொரு சம்பவமும் நிகழ்ந்தது. சஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றுள்ள அந்த அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு போரில் அதாவது பனூ முஸ்தலிக் போரில் இருந்தோம். முஹாஜிர்களில் ஒரு நபர் அன்ஸாரைச் சேர்ந்த ஒரு நபரின் முதுகில் அடித்து விட்டார். அந்த அன்ஸாரி, அன்ஸாரே! என்று அழைத்தார். முஹாஜிர்களே என்று முஹாஜிர் அழைத்தார். அதாவது இருவரும் உதவிக்காக தத்தமது மக்களை அழைத்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை இந்த விவகாரம் சென்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சப்தத்தை கேட்டதும் அறிவீனமான காலத்தின் குரல்கள் இப்போது எப்படி ஒலிக்கின்றன என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின்தூதர் (ஸல்) அவர்களே! முஹாஜிர்களில் ஒரு நபர் அன்ஸாரைச் சேர்ந்த ஒரு நபரின் முதுகில் அடித்து விட்டார் என்று அவர்கள் கூறினர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தை விட்டு விடுங்கள். இது தீய விஷயமாகும் என்று கூறினார்கள். சிறிய சிறிய விஷயங்களில் சண்டையிடத் துவங்காதீர்கள். இந்த வீணான விஷயங்களைச் செய்யாதீர்கள்.

அப்துல்லாஹ் பின் உபை இந்த விஷயத்தைக் கேட்டான். அவனும் அங்கிருந்தான். அவர்கள் இவ்வாறு செய்தனர். அதாவது ஒரு முஹாஜிர், அன்ஸாரைச் சேர்ந்த ஒருவரின் முதுகில் அடித்து விட்டார். அவர் ஒரு அடி அடித்திருந்தாலும் அல்லது இரண்டு அடி அடித்திருந்தாலும் இருக்கட்டும். ஆனால் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் மதீனாவிற்கு திரும்பி விட்டால் நிச்சயமாக மிக கண்ணியத்திற்குரிய நபர் (நவூதுபில்லாஹ்) மிகவும் இழிவான நபரை அங்கிருந்து வெளியேற்றி விடுவார் என்று கூறினார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த நயவஞ்சகனின் தலையை துண்டிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்குங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் அதை விட்டு விடுங்கள். முஹம்மத் (ஸல்) அவர்கள் தமது தோழர்களையே கொன்று விடுகின்றார் என்று மக்கள் கூறத் தொடங்கி விடுவார்கள் என்றும் கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம்.... ஹதீஸ் எண் 6583)

இந்த சம்பவம் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதனை நான் விட்டு விடுகின்றேன். இதற்கு முன்பும் நான் எடுத்துரைத்துள்ளேன். எவ்வாறிருப்பினும் அப்துல்லாஹ் பின் உபையின் கடைசி காலத்தின் நிலையை குறிப்பிட்டவாறு சீரத் இப்னு ஹிஷாம் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு அப்துல்லாஹ் பின் உபை இது போன்ற விஷயங்களை பேசி வந்தபோது அவனுடைய சமுதாயமே அவனை மிகவும் இழிவாக கூறி வந்தது. இந்த விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம், உமரே! நீர் ஒரு நாள் இவரை கொலை செய்வதற்காக கூறி இருந்தீர். அதாவது நான் இவரை கொன்று விட வேண்டும் என்று என்னிடத்தில் அனுமதி வேண்டியிருந்தீர். நானும் ஒரு வேளை அவரை கொல்வதற்கு அனுமதித்திருந்தால் மக்கள் அதனை வெறுப்புடன் பார்த்திருப்பார்கள். ஆனால் இப்போது நான் அவரை கொன்று விட கட்டளையிட்டால் அவர்கள் சுயமே அவரை கொன்று விடுவார்கள். பாருங்கள் பொறுமையின் காரணமாக நிலைமை வெளிப்பட்டதன் காரணமாக அவனுக்கு ஆதரவாக இருந்தவர்கள் தற்போது அவனுக்கு எதிராக ஆகி விட்டார்கள். இவர்களே அவரை கொலை செய்ய முடியும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக இறைத் தூதரின் கூற்றானது பரக்கத்தின் அடிப்படையில் எனது கூற்றை விட மிகவும் மகத்துவமிக்கது என்பதை நான் புரிந்து கொண்டேன்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 672 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நயவஞ்சகர்களின் தலைவரான அப்துல்லாஹ் பின் உபையின் ஜனாஸா தொழுகையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழ முற்பட்டபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ் தங்களை நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பதிலிருந்து தடுத்துள்ளான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நான் விரும்பினால் அவர்களுக்கு பாவமன்னிப்பு வேண்டுவேன். அல்லது வேண்டாமல் இருப்பேன்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனுடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஆனால் அல்லாஹ் அதுபோன்ற நபர்களின் ஜனாஸா தொழுகையை தொழுவதிலிருந்து முற்றிலுமாக தடை செய்து விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நயவஞ்சகர்களின் ஜனாஸா தொழுகையை தொழுவதை தடை செய்து விட்டார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 941 – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

அபூஸல்மா அவர்கள் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அகழ் போர் நாளன்று சூரியன் மறைந்த பிறகு ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் குரைஷிய நிராகரிப்பாளர்களை ஏசிப் பேசினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அஸர் தொழுகையும் கிடைக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் சூரியன் மறையத் தொடங்கியது என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நானும் கூட தொழவில்லை என்று கூறினார்கள். அப்போது நாங்கள் எழுந்து புத்ஹான் என்ற இடத்தை நோக்கி சென்றோம். புத்ஹான் என்பதும் மதீனாவின் பள்ளத்தாக்குகளில் ஒரு பள்ளத்தாக்கு ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைக்காக வுளூ செய்தார்கள். நாங்களும் வுளூ செய்தோம். சூரியன் மறைந்த பிறகு அஸர் தொழுகையை தொழுதோம். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்குப் பிறகு மக்ரிப் தொழுகையை தொழுதார்கள். இது புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹ் புகாரி.... ஹதீஸ் எண் 596 மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 529 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பாக இந்த விவாதம் நடைபெற்றது. அதாவது அகழ் போரின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அன்னாரது சஹாபிகளும் எத்தனை தொழுகைகளை தொழ முடியாமல் போனது? என்று விவாதம் நடைபெறுகின்றது. இது பற்றி பல்வேறு அறிவிப்புகள் கிடைக்கின்றன. அந்த வகையில் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அகழ் போர் நாளன்று நிராகரிப்பாளர்களை ஏசினார்கள். மேலும் எனக்கு அஸர் தொழுகை கிடைக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் சூரியன் மறைந்து விட்டது என்றும் கூறினார்கள். அப்போது நாங்கள் புத்ஹான் என்ற இடத்தை அடைந்தோம். சூரியன் மறைந்த பிறகு அவர்கள் தொழுதார்கள். பின்னர் அவர்கள் மக்ரிப் தொழுகையை தொழுதார்கள். இதுவும் புகாரியிலேயே உள்ள அறிவிப்பாகும். முந்தைய அறிவிப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உடன் இருந்தார்கள் என்று வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி.... ஹதீஸ் எண் 598)

பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ் போர் சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வே! இந்த காஃபிர்களின் வீட்டையும் அவர்களின் கபருகளையும் நெருப்பால் நிரப்பி விடுவாயாக என்று துஆ செய்தார்கள். அவர்கள் எங்களை போரில் மும்முரமாக வைத்து விட்டார்கள். நடுத்தொழுகையை தொழுவதற்கான சந்தர்ப்பம் வழங்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் சூரியன் மறைந்து விட்டது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 411)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பும் புகாரியில் உள்ளது.

பின்னர் அபூ உபைதா பின் அப்தில்லாஹ் தமது தந்தையிடமிருந்து இவ்வாறு அறிவிக்கின்றார்கள். அகழ் போர் நாளன்று இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நான்கு தொழுகைகளிலிருந்து தடுத்து விட்டார்கள். அதாவது இரவின் பகுதி அல்லாஹ் நாடிய அளவிற்கு கடந்து விட்டது.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டபோது அன்னார் பாங்கு கொடுத்தார்கள். பின்னர் அன்னார் இகாமத் கூறும்படி கட்டளையிட்டார்கள். மேலும் லுஹர் தொழுகையை தொழுதார்கள். பின்னர் இகாமத் கூறும்படி கூறினார்கள். அஸர் தொழுகையையும் தொழுதார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இகாமத் கூறும்படி கூறினார்கள். மக்ரிப் தொழுகையை தொழுதார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இகாமத் கூறும்படி கூறினார்கள். மேலும் இஷா தொழுகையை நடத்தினார்கள். இது முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும்.

(நூருல் குர்ஆன் எண்.2, ரூஹானீ கஸாயின் தொகுதி 9 பக்கம் 389, 390)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த அனைத்து அறிவிப்புகளையும் பலவீனமானதாக அறிவித்தவாறு ஒரேயொரு அறிவிப்பை மட்டும் சரியானது என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதில் அஸர் தொழுகையை சிறிது அளவு குறுகிய நேரத்தில் தொழுததைப் பற்றிய குறிப்பு உள்ளது. எனவே அகழ் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு தொழுகைகளை கஸா செய்தது பற்றி ஃபதஹ் மஸீஹ் என்ற பாதிரியின் ஆட்சேபனைக்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

உங்களுடைய இந்த ஷய்த்தானிய சந்தேகம் (தவறாகும்). அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ் தோண்டிய நேரத்தில் நான்கு தொழுகைகளையும் கஸா செய்ததாக நீங்கள் கூறுகின்றீர்கள். முதலாவதாக உங்களது அறிவின் நிலை எவ்வாறு இருக்கின்றது என்றால் நீங்கள் கஸா என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளீர்கள். அறிவிலியே! கஸா என்பது தொழுகையை நிறைவேற்றுவதற்காக கூறப்படுமே தவிர தொழுகையை கை விடுவதற்கு கூறப்படுவதில்லை. அதாவது தொழுகையை கைவிட்டு விடுவதன் பெயர் ஒருபோதும் கஸா அல்ல. ஒருவர் தொழுகையை விட்டு விட்டால் அதற்கு பெயர் ஃபவ்த் ஆகும். அதாவது தொழுகை மரணித்து விட்டது என்று பொருள்.

எனவே நாம் 5000 ஆயிரம் ரூபாய் பரிசுக்கான பிரசுரம் வழங்கினோம். கஸாவிற்கான பொருள் இதுவரை தெரியாத முட்டாள்கள் கூட இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்கின்றனர். சொற்களை கூட உரிய இடத்தில் பயன்படுத்த முடியாத ஒரு அறிவிலி ஆழமான, நுட்பமான காரியங்களில் ஆட்சேபனை செய்வதற்கு அவரிடம் என்ன தகுதி உள்ளது?

அகழ் தோண்டப்பட்ட நேரத்தில் நான்கு தொழுகைகள் ஜமு செய்யப்பட்டன என்ற முட்டாள்தனமான சந்தேகத்திற்கு பதில் என்னவென்றால், அல்லாஹ் இவ்வாறு

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai (Sec.Taleem, Melapalayam)

கூறியுள்ளான்: மார்க்கத்தில் தவறில்லை. அதாவது மனிதனின் அழிவிற்கே காரணியாகி விடுகின்ற கடுமைகள் மார்க்கத்தில் இல்லை. எனவே அவன் தேவைகளின்போதும், ஆபத்தின் நிலையிலும் தொழுகைகளை ஜமு செய்வதற்கும், கஸா செய்வதற்கும் கட்டளையிட்டுள்ளான். ஆனால் இந்த இடத்தில் எமது எந்த நம்பத்தகுந்த ஹதீஸிலும் நான்கு தொழுகைகளை ஜமு செய்வது பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை.

இன்னும் கூறப்போனால் ஃபத்ஹுல் பாரி ஷரஹ் சஹீஹ் புகாரியில் இவ்வாறு எழுதுப்பட்டுள்ளது. சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது: ஒரு தொழுகை அதாவது அஸர் தொழுகை சிறிதளவு தாமதத்துடன் நிறைவேற்றப்பட்டது. நீங்கள் தற்போது எமக்கு முன்னால் இருந்திருந்தால் நாம் உங்களை இங்கே அமர்த்தி இவ்வாறு கேட்டிருப்போம். (ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்த எதிரியை நோக்கி கூறினார்கள்).

நான்கு தொழுகைகள் ஃபவ்த் ஆகிவிட்டன என்று ஒருமித்த அறிவிப்பு உள்ளதா? நான்கு தொழுகைகளும் ஆரம்பத்தின் அடிப்படையில் ஜமு செய்யக்கூடியதாகவே உள்ளன. அதாவது லுஹர் மற்றும் அஸர் தொழுகையையும், மக்ரிப் மற்றும் இஷா தொழுகையையும் ஜமு செய்து கொள்ள முடியும். ஆயினும் லுஹர், அஸர், மக்ரிப் மற்றும் இஷா ஆகியவை ஒன்றாக தொழப்பட்டதாக ஒரு பலவீனமான அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது. ஆயினும் ஏனைய சஹீஹ் ஹதீஸ்கள் அந்த கருத்தை ரத்து செய்கின்றன. அஸர் தொழுகை மட்டும் தாமதமாக தொழுப்பட்டதாகவே அந்த அறிவிப்புகள் கூறுகின்றன.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 685 – 2001) ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 46 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹுதைபிய்யா உடன்படிக்கையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நடவடிக்கை பற்றி எழுதப்பட்டுள்ள விஷயங்கள் இவ்வாறாக உள்ளன. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களை மக்காவிற்கு அனுப்பி வைப்பதற்காகவும், மக்கத்து தலைவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதற்காக வந்துள்ளார்கள் என்பதையும் தெளிவுபடுத்தும்படி கூறுவதற்காகவும் அன்னார் அழைத்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! குரைஷியர்களிடமிருந்து எனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. ஏனென்றால் அவர்கள் மீதான என்னுடைய பகைமையின் நிலையை அவர்கள் அறிந்துள்ளனர். நான் குரைஷிகளின் எவ்வளவு பெரிய எதிரி என்பதை அவர்கள் அறிவர். நான் அவர்கள் மீது எந்த அளவிற்கு கடினம் காட்டுகின்றேன் என்பதை அவர்கள் அறிவர். மேலும் பனூ அதீ பின் கஅப் என்ற எனது கோத்திரத்தைச் சேர்ந்த என்னை பாதுகாக்கக்கூடிய எந்த நபரும் மக்காவில் இல்லை. எனவே அன்னார் சிறிது தயக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நீங்கள் விரும்பினால் நான் அவர்களிடம் சென்று விடுகின்றேன் என்றும் கூறியதாக வருகின்றது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒன்றும் கூறவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மேலும் இவ்வாறு கூறினார்கள்: நாம் குரைஷியர்களின் பார்வையில் என்னை விட கண்ணியத்திற்குரிய நபரை பற்றி தங்களுக்கு கூறுகின்றேன். அவர் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் ஆவார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஸ்மானை அழைத்தார்கள். மேலும் அவர்களை அபூ சுஃப்யான் மற்றும் ஏனைய குரைஷிய தலைவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போருக்காக வரவில்லை. கஃபாவை வலம் வருவதற்கும், அதனுடைய கண்ணியத்தை பேணுவதற்காகவும் மட்டுமே வந்துள்ளார்கள் என்ற செய்தியை அவர்களிடம் கூறும்படி கூறினார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 685 – 2001) ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & சபலுல் ஹுதா வர்ரிஷாத் தொகுதி 5 பக்கம் 46 – 1993 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

இது தொடர்பான விளக்கம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய நற்குறிப்பிலும் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹுதைபிய்யா உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோது மக்கத்து குரைஷிகளின் தூதரான சுஹைல் பின் அம்ரின் மகன் அபூ ஜந்தல் சங்கிலிகளாலும், விலங்குகளாலும் கட்டப்பட்டவாறு அந்த சபையை வந்தடைந்தார். மக்கத்து வாசிகள் அந்த இளைஞனை முஸ்லிமாகி விட்ட காரணத்தினால் கைது செய்திருந்தனர். கடுமையான தண்டனையை அவருக்கு வழங்கிக் கொண்டிருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிற்கு இவ்வளவு அருகில் வருகை தந்துள்ளார்கள் என்று அவருக்கு தெரிய வந்தபோது அவர் எப்படியோ மக்கத்து வாசிகளின் சிறையிலிருந்து தப்பித்து கட்டப்பட்ட சங்கிலிகளுடனும், விலங்குகளுடனும் அங்கு வந்தடைந்தார். மக்காவிலிருந்து முஸ்லிம்களிடம் வருகின்றவர் யாராக இருந்தாலும் அவர் திருப்பி ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை அவரது தந்தை எழுதிக் கொண்டிருந்த நேரத்தில் தற்செயலாக அபூஜந்தல் வந்தடைந்தார். அபூ ஜந்தல் தவழ்ந்து வந்து தம்மை முஸ்லிம்களிடம் ஒப்படைத்தார். வேதனை நிறைந்த குரலுடன் முஸ்லிம்களே! இஸ்லாத்தின் காரணமாக மட்டுமே எனக்கு இந்த தண்டனை வழங்கப்படுகின்றது. இறைவனுக்காக என்னை காப்பாற்றுங்கள் என்று கூறினார். அந்தக் காட்சியைக் கண்டு முஸ்லிம்கள் துடித்து விட்டனர்.

ஆயினும் சுஹைல் தமது பிடிவாதத்தில் உறுதியாக இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கூறினார்: இந்த உடன்படிக்கையின்படி நான் வைக்கின்ற முதலாவது கோரிக்கை இதுவாகும்: அது என்னவென்றால், அபூஜந்தலை நீங்கள் என்னிடம் ஒப்படையுங்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இப்போது உடன்படிக்கை முழுமையடையவே இல்லை! இப்போது பேசிக்கொண்டு தானே இருக்கின்றோம். எந்த விஷயமும் இறுதி செய்யப்படவில்லையே என்று கூறினார்கள். அதற்கு நீங்கள் அபூஜந்தலை ஒப்படைக்காவிட்டால் இந்த உடன்படிக்கை தொடர்பான நடவடிக்கை முறிந்து விட்டதாக புரிந்து கொள்ளுங்கள் என்று சுஹைல் கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விஷயத்தை முடித்துக் கொள்ளுங்கள். வாருங்கள். வாருங்கள். மற்ற விஷயங்களை விட்டு விடுங்கள். மேலும் கருணையின் அடிப்படையிலாவது அபூஜந்தலை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர், இது ஒருபோதும் முடியாது என்று சுஹைல் கூறினார். சுஹைலே! பிடிவாதம் பிடிக்காதீர். எனது விஷயத்தை ஏற்றுக் கொள்ளும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுஹைல் கூறினார்.

அந்த சந்தர்ப்பத்தில் அபூ ஜந்தல் மீண்டும் ஒரு முறை கூக்குரலிட்டுக் கூறினார்: முஸ்லிம்களே! உங்களுடைய ஒரு முஸ்லிம் சகோதரன் கடுமையான தண்டனையின் நிலையில் இணை வைப்பவரிடம் திருப்பி அனுப்பி வைக்கப்படுவானா? என்று கேட்டார். இது ஒரு விநோதமான விஷயமாகும்.

அந்த நேரத்தில் அபூஜந்தல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையிடவில்லை. மாறாக, முஸ்லிம் பொது மக்களிடம் அவர் முறையிட்டார். அதற்கு காரணம் ஏறக்குறைய இதுவாகவே இருக்கும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் எவ்வளவு வேதனை இருந்தாலும் அன்னார் எந்த நிலையிலும் உடன்படிக்கை நடவடிக்கைகளில் தொய்வு ஏற்படுவதை விரும்ப மாட்டார்கள் என்பதை அபூஜந்தல் அறிந்திருந்தார். ஆயினும் முஸ்லிம் பொது மக்கள் உத்வேகத்திற்கு ஆளாகி உதவி

செய்ய வந்து விடுவார்கள் என்று அவர் முஸ்லிம் பொது மக்களிடம் எதிர்பார்த்திருந்தார்.

ஏனென்றால் அப்போது தான் உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருந்தது. அவர் விடுதலை ஆவதற்கு ஏதாவதொரு வழி ஏற்பட்டு விடும் என்றும் அவர் முஸ்லிம்களிடம் எதிர்பார்த்தார். ஆயினும் முஸ்லிம்கள் எவ்வளவு தான் உணர்வுப்பூர்வமானவர்களாக இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கு எதிராக எந்தவொரு செயலையும் செய்ய மாட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு வேதனைமிகு சொற்களில் இவ்வாறு கூறினார்கள்:

அபூஜந்தலே! பொறுமையுடன் செயல்படுவீராக. இறைவனிடத்தில் உமது பார்வையை வைப்பீராக. இறைவன் உங்களுக்காகவும் உங்களுடைய ஏனைய பலவீனமான முஸ்லிம்களுக்காகவும் நிச்சயம் ஏதாவதொரு வழியை திறந்து விடுவான். ஆயினும் நாங்கள் இப்போது நிர்பந்தத்திற்கு உள்ளாகி இருக்கின்றோம். ஏனென்றால் மக்கத்துவாசிகளுடன் உடன்படிக்கைக்கான விஷயம் பேசப்பட்டு விட்டது. நாங்கள் இந்த உடன்படிக்கைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க விரும்பவில்லை.

முஸ்லிம்கள் இந்தக் காட்சியை கண்டு கொண்டிருந்தனர். மார்க்க ரோஷத்தால் அவர்களின் கண்களிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு முன்னால் அதனை தாங்கிக் கொண்டு அமைதியாக இருந்தார்கள். கடைசியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் அமைதியாக இருக்க முடியவில்லை. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் வந்தார்கள். அன்னார் நடுங்கிய குரலுடன் கூறினார்கள்: தாங்கள் இறைவனுடைய உண்மையான தூதர் இல்லையா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! நிச்சயம், நிச்சயம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நாம் உண்மையில் இருக்கவில்லையா?. நமது எதிரி பொய்யில் இல்லையா? என்று கேட்டார்கள். ஆம்! ஆம்! நிச்சயம் அப்படித்தான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அவ்வாறிருக்க நமது உண்மையான மார்க்க விவகாரத்தில் நாம் ஏன் இழிவை சகித்துக் கொள்ள வேண்டும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிலையைப் பார்த்து சுருக்கமான சொற்களில் இவ்வாறு கூறினார்கள்: உமரே! பாருங்கள். நான் இறைவனின் தூதராவேன். நான் இறைவனுடைய விருப்பத்தை அறிகின்றேன். அதற்கெதிரில் என்னால் செயல்பட முடியாது. அவனே எனது உதவியாளன் ஆவான். அதாவது அல்லாஹ்வே எனது உதவியாளன் ஆவான். ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இயல்பில் சற்று வேகம் அதிகரித்துக் கொண்டே சென்றது. நாம் பைத்துல்லாஹ்வை தவாஃப் செய்வோம் என்று தாங்கள் எங்களிடம் கூறவில்லையா? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஆம்! நிச்சயம் நான் கூறியிருந்தேன். ஆயினும் இந்த வருடமே கண்டிப்பாக தவாஃப் செய்வோம் என்று நான் கூறியிருக்கவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்களள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆம், நீங்கள் அவ்வாறு கூறவில்லைதான்.

அன்னார் கூறினார்கள்: அப்படியென்றால் காத்திருக்கவும். நீங்கள் நிச்சயமாக மக்காவில் நுழைவீர்கள். கஃபாவையும் வலம் வருவீர்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்த உணர்வுப் பூர்வமான நிலை திருப்தி அடையவில்லை. எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்பான திகில் இருந்தது. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்து விலகி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். அன்னாரிடமும் அவர்கள் இதே விஷயங்களை பேசினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் இதுபோன்ற பதிலையே வழங்கினார்கள். ஆயினும் அத்துடன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிவுரையாக ஒன்றை கூறினார்கள். உமரே! பாருங்கள். உங்களை கட்டுப்பாட்டில் வையுங்கள். இறைவனுடைய தூதரின் கையில் நீங்கள் உங்களது கரத்தை வைத்துள்ளீர்கள். அந்த கயிற்றை விட்டு விடாதீர்கள். இறைவன் மீது ஆணையாக! எந்த நபரின் கரத்தில் நாம் நமது கரத்தை ஒப்படைத்திருக்கின்றோமோ அவர் எல்லா நிலையிலும் உண்மையாளர் ஆவார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது நான் எனது வயதின் காரணமாக உணர்வுப்பூர்வமான நிலையில் சில விஷயங்களை பேசி விட்டேன். ஆயினும் பிற்காலத்தில் எனக்கு மிகவும் வெட்க உணர்வு ஏற்பட்டது. நான் தப்பாவின் வடிவில் அந்த பலவீனங்களின் தாக்கத்தை கழுவுவதற்காக மிக அதிகமாக நற்செயல்களை செய்து வந்துள்ளேன். அதாவது தான தர்மங்கள் செய்தேன். நோன்புகள் நோற்றேன். நஃபில் தொழுகைகளை தொழுதேன். மேலும் அடிமைகளை விடுதலை செய்தேன். எந்த அளவுக்கு என்றால் எனது இந்த பலவீனத்தின் தாக்கம் அகன்று விடும் அளவிற்கு நான் அடிமைகளை விடுதலை செய்தேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 766–768)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தமது கிலாஃபத்திற்கு முன்னர் ஜல்ஸாவில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்னார் ஜல்ஸாவில் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார்கள். இது தொடர்பாக அதன் ஒரு பகுதியை நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் இருந்த வேதனையும், துடிப்பும் கேள்வியாக மாறி வெளிப்பட்டது. அதே உணர்வும், துடிப்பும் எனது உள்ளங்களிலும் மறைந்திருந்தது. இதில் எந்த ஐயமும் இல்லை. அதாவது எந்த உணர்வுகளை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நாவு வெளிப்படுத்தியதோ அது வெறும் ஒரு உமருடைய உணர்வுகளாக இருக்கவில்லை. மாறாக மற்றவர்களின் உணர்வுகளாகவும் இருந்தது. நூற்றுக்கணக்கானவர்களின் நெஞ்சங்களில் இதுபோன்ற உணர்வுகள் மறைந்திருந்தன. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதனை வெளிப்படுத்தும் தைரியத்தை கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வாழ்நாள் முழுவதும் இந்த செயலுக்காக வருந்திக் கொண்டிருந்தார்கள். ஏராளமான நோன்பு நோற்றார்கள். அதிகமாக இறைவணக்கம் செய்தார்கள். அதிகமாக தான தர்மங்கள் செய்தார்கள். மேலும் பாவமன்னிப்பு கோரியவாறு சஜ்தாக்களை (கண்ணீரால்) நனைத்தார்கள். ஆயினும் வெட்கத்தின் தாகம் தணியாமல் இருந்தது. ஹுதைபிய வேதனை என்பது தற்காலிகமாக இருந்தது. அது மிக விரைவாக விண்ணிலிருந்து இறங்கக்கூடிய ரஹ்மத்துகள் அதனை நிம்மதியால் மாற்றி விட்டது. ஆயினும் பொறுமையற்ற நிலையில் கேட்கப்பட்ட கேள்வியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட துடிப்பு நிரந்தரமான வேதனையாக மாறி விட்டது. அது அன்னாரை ஒருபோதும் விட்டு விடவில்லை. எப்போதும் மிக ஏக்கத்துடன் இதையே கூறி வந்தார்கள். அதாவது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அந்த கேள்வியை கேட்காமல் இருந்திருக்க வேண்டுமே என்று அன்னார் கூறி வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் பலமுறை இதனை சிந்திக்கின்றேன். மரணப்படுக்கையில் இறுதி மூச்சின்போது لَا لِيْ وَلَا عَلَيَّ என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வேதனையுடன் கூறிக் கொண்டிருந்தார்கள். அதாவது இறைவா! நான் உன்னிடம் எனது நன்மைக்கான கூலிகளை வேண்டவில்லை. நான் வேண்டுவது என்னவென்றால், நீ எனது குற்றங்களை மன்னித்து விட வேண்டும். எல்லா தவறுகளை விடவும் மாபெரும் ஒரு தவறு இந்த ஒரு தவறாகும். அதனை அன்னார் சிந்தித்து நிம்மதியிழந்து இருந்தார்கள். ஹுதைபியா மைதானத்தில் அன்னாரிடம் இந்த தவறு வெளிப்பட்டிருந்தது. சமாதான உடன்படிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருந்தபோது சஹாபிகளின் நிம்மதியற்ற நிலைமையையும் மன வேதனைனையும் கண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உள்ளத்தில் ஏற்பட்ட வேதனையின் இரகசியத்தை அன்னார் (ஸல்) அவர்களின் விண்ணின் எஜமானனும், எல்லையற்ற அன்பு கொள்ளக்கூடியவனுமாகிய

உயர்ந்த நண்பனை (இறைவனை) தவிர்த்து வேறு யார் அறிய முடியும்? ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு பதில் வழங்கியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளி வந்த இந்த மூன்று வாக்கியங்களை சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக அதிகமாக (விஷயத்தை) கூறியிருந்தார்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

**(குத்பாத்தே தாஹிர் (தகாரீர் ஜல்ஸா ஸாலானா கப்ல் அஸ் கிலாஃபத்) பக்கம் 428)**

ஹுதைபிய்யா உடன்படிக்கை சந்தர்ப்பத்தின்போது முஸ்லிம்கள் மற்றும் மக்கத்து குரைஷிகளுக்கு மத்தியில் நிகழ்ந்த ஒப்பந்தத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கையொப்பமும் இருந்தது. இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த ஒப்பந்தத்தின் இரண்டு நகல்கள் எடுக்கப்பட்டன. இரு தரப்பையும் சார்ந்த கண்ணியத்திற்குரிய பல நபர்கள் அதில் சாட்சியாக கையெழுத்திட்டிருந்தனர். முஸ்லிம்கள் சார்பாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) ஆகியோர் கையொப்பமிட்டனர். உடன்படிக்கை முழுமையடைந்த பிறகு சுஹைல் பின் அம்ர் உடன்படிக்கையின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு மக்காவை நோக்கி திரும்பிச் சென்று விட்டார். மற்றொரு நகல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது.

**(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 769)**

ஹுதைபிய்யா உடன்படிக்கையிலிருந்து திரும்பி வருவது தொடர்பாக சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: குர்பானி போன்ற பணிகளை முடித்து விட்டு மதீனாவிற்கு திரும்புமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அந்த நேரம் ஹுதைபிய்யாவிற்கு வருகை தந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏறக்குறைய சுமார் 20 நாட்கள் ஆகி இருந்தன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பி வருகின்ற பயணத்தில் உஸ்ஃபான் என்ற இடத்தில் குராவுல் கமீன் என்ற இடத்தை அடைந்தார்கள். உஸ்ஃபான் என்ற இடம் மக்காவிலிருந்து 103 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. குராவுல் கமீன் உஸ்ஃபான் என்ற இடத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அது இரவு நேரமாக இருந்தது. எனவே அறிவிப்பு செய்து சஹாபிகள் ஒன்று கூட்டப்பட்டனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்று இரவு என்மீது ஒரு சூரா இறங்கியுள்ளது. அது உலகின் அனைத்து விஷயங்களை விடவும் எனக்கு மிகவும் பிடித்தமானதாகும். அது இதுவாகும் என்று கூறினார்கள்: அதாவது சூரா ஃபத்ஹ் பற்றி கூறினார்கள்.

إِنَّا فَتَحْنَا لَكَ فَتْحًا مُبِينًا لِّيَغْفِرَ لَكَ اللَّهُ
مَا تَقَدَّمَ مِن ذَنبِكَ وَمَا تَأَخَّرَ وَيُتِمَّ نِعْمَتَهُ عَلَيْكَ
وَيَهْدِيَكَ صِرَاطًا مُّسْتَقِيمًا وَيَنصُرَكَ اللَّهُ نَصْرًا عَزِيزًا

இவை சூரா ஃபத்ஹின் இரண்டு முதல் நான்கு வரையிலான வசனங்களாகும். பின்னர் வசனம் இதேபோன்றே செல்கின்றது. 28 வது வசனத்தில் இவ்வாறு உள்ளது.

لَقَدْ صَدَقَ اللَّهُ رَسُولَهُ الرُّؤْيَا بِالْحَقِّ لَتَدْخُلُنَّ
الْمَسْجِدَ الْحَرَامَ إِن شَاءَ اللَّهُ آمِنِينَ مُحَلِّقِينَ
رُءُوسَكُمْ وَمُقَصِّرِينَ لَا تَخَافُونَ

தூதரே! நாம் உமக்கு மகத்துவமிக்க ஒரு வெற்றியை வழங்கியுள்ளோம். நாம் உமக்காக ஒரு நீண்ட காலகட்டத்தை துவக்க இருக்கின்றோம். அதில் உமது முந்தைய, பிந்தைய அனைத்து தவறுகள் மீது திரையிடப்படும். அப்போது இறைவன் தமது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்குவான். உமக்கான வெற்றிக்குரிய நேரான வழியை திறப்பான். மேலும் நிச்சயமாக அல்லாஹ் உமக்கு வலிமையுடன் உதவி செய்வான். உண்மை என்னவென்றால், இறைவன் தமது தூதரின் இந்த கனவை நிறைவேற்றி விட்டான். அவனே அந்த கனவை தூதருக்கு காட்டியிருந்தான். ஏனென்றால் இனி நீங்கள் நிச்சயமாக அமைதியான நிலையில் மஸ்ஜித் ஹராமில் நுழைவீர்கள். மேலும் குர்பானிகளை இறைவனின் வழியில் வைத்து விட்டு உங்களது தலை முடிகளை சிரைத்துக் கொள்ளுங்கள். அல்லது வெட்டிக் கொள்ளுங்கள். உமக்கு எந்த அச்சமும் இருக்காது.

அதாவது நீங்கள் இந்த வருடம் மக்காவில் நுழைந்து விட்டால் அது அமைதிக்குரிய நுழைதலாக இருக்காது. மாறாக, இரத்தம் சிந்துதலுக்குரிய நுழைதலாக இருக்கும். ஆனால் இறைவன் கனவில் அமைதியுடன் நுழைவதை காட்டியிருந்தான். எனவே இறைவன் இந்த வருடம் உடன்படிக்கையின் விளைவாக அமைதியின் நிலையை ஏற்படுத்தி இருந்தான். நீங்கள் விரைவில் கனவுக்கேற்ப அமைதியான நிலையில் மஸ்ஜித் ஹராமில் நுழைவீர்கள். இறைவன் காட்டிய காட்சியை பார்ப்பீர்கள். இறுதியில் அவ்வாறே நிகழ்ந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை சஹாபிகளுக்கு எடுத்துரைத்தார்கள். அவர்களில் எந்த சஹாபிகளின் உள்ளங்களில் இன்னும் ஹுதைபிய்ய உடன்படிக்கைகளின் கசப்புகள் எஞ்சியிருந்தனவோ அவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள். வெளிப்படையில் நாம் தோல்வியடைந்து திரும்பிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இறைவன் நமக்கு வெற்றிக்கான வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றானா! என ஆச்சரியப்பட்டார்கள். எந்த அளவுக்கென்றால் சில சஹாபிகள் அவசர கோலத்தில் இந்த வார்த்தைகளையும் கூறி விட்டனர். நாம் பைத்துல்லாஹ்வை வலம் வருவதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக இருந்து திரும்பிக் கொண்டிருக்கின்றோம். இதுவும் ஒரு வெற்றியா? என்று ஒருவர் கூறிய விஷயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரை எட்டியது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் கடுமையாக தமது கோபத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஒரு சுருக்கமான சொற்பொழிவில் உத்வேகத்துடன் அன்னார் கூறினார்கள். இது அறிவீனமான ஆட்சேபனை ஆகும். ஏனென்றால் சிந்தித்துப் பார்த்தால் உள்ளபடியே ஹுதைபிய்ய உடன்படிக்கை நமக்கு ஒரு மாபெரும் வெற்றியாகும். நமக்கு எதிராக குரைஷிகள் போர் மைதானத்தில் இறங்கி இருந்தார்கள். அவர்கள் சுயமே போரை கைவிட்டு விட்டு சமாதானத்திற்கான உடன்படிக்கையை செய்திருந்தார்கள். மேலும் அடுத்த வருடம் மக்காவின் கதவுகளை திறப்பதாக வாக்குறுதி வழங்கி இருந்தார்கள். மேலும் நாம் அமைதியுடனும், பாதுகாப்புடனும், மக்கத்துவாசிகளின் குழப்பங்களிலிருந்து பாதுகாப்புடன் இருந்து கொண்டு, எதிர்காலத்தின் நறுமணத்தை உணர்ந்தவாறு உடன்படிக்கை செய்து கொண்டோம். மேலும் மதீனாவிற்கு திரும்பிக் கொண்டிருக்கின்றோம். எனவே நிச்சயமாக இது ஒரு மாபெரும் வெற்றியாகும். நீங்கள் இந்த காட்சிகளை மறந்து விட்டீர்களா? இதே குரைஷிகள் உஹது போரிலும், அகழ் போரிலும் அவர்கள் உங்கள் மீது எவ்வாறெல்லாம் போர் தொடுத்து வந்தனர். இந்த பூமி மிகவும் பரந்துபட்டதாக இருந்தபோதிலும் உங்களுக்கு சுருக்கப்பட்டது. உங்களது கண்கள் பிதுங்கி விட்டன. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆனால் இன்று அதே குரைஷிகள் உங்களுடன் அமைதி மற்றும் சமாதானத்திற்கான உடன்படிக்கையை செய்கின்றார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. **(14:36)**

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

சஹாபி ஒருவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இப்போது நாங்கள் புரிந்து கொண்டோம்; நாங்கள் புரிந்து கொண்டோம். எதுவரை தங்களின் பார்வை அடைகின்றதோ அங்கு எங்களது பார்வை அடைவதில்லை. ஆயினும் தற்போது நாங்கள் இதனை புரிந்து கொண்டோம். உண்மையிலேயே இந்த உடன்படிக்கை நமக்கு ஒரு மாபெரும் வெற்றியாகும் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிகழ்த்தும் வரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் மிகவும் கலக்கமடைந்திருந்தார்கள். எனவே அவர்களே இதனை எடுத்துரைக்கின்றார்கள். ஹுதைபியாவிலிருந்து திரும்பி வரும்போது இது நிகழ்ந்ததாகும். இரவு நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது பயணத்தில் இருந்தார்கள். நான் அந்த நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி சில விஷயங்களை கூற விரும்பினேன். ஆனால் அன்னார் மௌனமாக இருந்தார்கள். ஆனால் நான் மீண்டும் மெதுவாக அழைத்தேன். ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த மௌனத்தால் மிகவும் வேதனை ஏற்பட்டது. நான் எனது மனதில் இவ்வாறு கூறிக் கொண்டேன்: உமரே! நீ அழிந்து விட்டாய். நீ மூன்று முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்தாய். ஆனால் அன்னார் பேசவில்லை. எனவே நான் முஸ்லிம்களின் கூட்டத்திலிருந்து முதல் முதலில் எல்லோரையும் விட முன்னோக்கி சென்றேன். நான் இந்த வேதனையில் மிகவும் நிம்மதியிழந்தேன். என்ன விஷயம்? ஏன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் பேசவில்லை? என்னைப் பற்றி திருக்குர்ஆன் வசனம் எதுவும் இறங்கி விடக்கூடாதே என்ற அச்சமும் எனக்கு ஏற்பட்டது. இதற்கிடையில் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அழைக்கின்றார்கள் என்று அன்னாரது பெயரைக்கூறி ஒரு நபர் அழைத்தார். என்னைப் பற்றி ஏதோ திருக்குர்ஆன் வசனம் இறங்கி விட்டது என்று நான் கருதினேன். எனவே நான் பதற்றமடைந்தவாறு வேக வேகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். மேலும் சலாம் கூறியவாறு அன்னாருக்கு அருகில் அமர்ந்தேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உலகில் அனைத்து விஷயங்களையும் விடவும் எனக்கு மிகவும் விருப்பத்திற்குரிய ஒரு சூரா இறங்கியுள்ளது என்று கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் ஃபத்ஹ் அதிகாரத்தின் வசனங்களை திலாவத் செய்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இந்த உடன்படிக்கை உண்மையிலேயே இஸ்லாத்திற்கு வெற்றியா? என்று கேட்டார்கள். ஆம்! நிச்சயமாக இது நமக்கு வெற்றியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திருப்தியடைந்து அமைதியாகி விட்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு திரும்பி வந்து விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 770–772)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹுதைபிய்யா உடன்படிக்கை சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கத்து இணை வைப்பவர்களுடன் சமாதானம் செய்து கொண்டார்கள். அதன் காரணமாக சஹாபிகளுக்கு மத்தியில் எந்த அளவிற்கு நிம்மதியின்மை ஏற்பட்டு விட்டதென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற நபரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார். மேலும் இவ்வாறு கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாம் கஃபாவை வலம் வருவோம் என்று அல்லாஹ் தங்களிடம் வாக்குறுதி வழங்கவில்லையா? இஸ்லாத்திற்கு வெற்றி நிர்ணயிக்கப்படவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஏன் இல்லை என்று கூறினார்கள். பிறகு நாம் ஏன் பணிந்து சமாதானம் செய்து கெண்டோம்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நாம் தவாஃப் செய்வோம் என்று நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதி அளித்திருந்தான். ஆயினும் இந்த வருடமே (தவஃபாப்) செய்வோம் என்று கூறவில்லையே? என்று கேட்டார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 30 பக்கம் 220)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு தற்போது நடைபெற்று வருகின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் தொடரும். தற்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். அவர்களின் ஜனாஸா தொழுகையையும் நடத்துவேன். அவர்களில் முதலில் கூறப்பட இருக்கின்ற குறிப்பு, மதிப்பிற்குரிய மலிக் முஹம்மத் யூசுஃப் சலீம் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 86 வது வயதில் மரணமடைந்துள்ளார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

அன்னார் மட்டுமே தமது குடும்பத்தில் அஹ்மதியாக இருந்தார்கள். 1952 ஆம் ஆண்டில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டிருந்தார்கள். அன்னாரின் மூத்த சகோதரர் அன்னாருக்கு இரயில்வேயில் வேலை வாங்கிக் கொடுத்தார். அப்போது அங்கு மீர் ஹமீதுல்லாஹ் சாஹிப் அவர்கள் தலைமைப் பொறியாளராக இருந்தார்கள். அவர்கள் அஹ்மதியாக இருந்தார்கள். அல் ஃபஸ்ல் பத்திரிகை வந்து கொண்டிருந்தது. மீர் ஹமீதுல்லாஹ் சாஹிப் அவர்களும் தப்லீக் செய்து வந்தார்கள். அல்ஃபஸ்ல் படித்து அஹ்மதி ஆனார். எவ்வாறிருப்பினும் அன்னாரது குடும்பத்தினருக்கு தெரிய வந்தவுடன் அவர்கள் மிகவும் இவரை அச்சமூட்டி எச்சரித்தனர். அஹ்மதிய்யத்தை விட்டு விடுமாறு கூறி கொலை செய்து விடுவதாகவும் மிரட்டல் விடுத்தனர். ஆனால் அவர்கள் தமது குடும்பத்தை விட்டு விட்டார்கள். அஹ்மதிய்யத்தை விட்டு விடவில்லை. இறுதியில் மிக அதிகமான அபாயம் ஏற்பட்டபோது குடும்பத்தை விட்டு விட்டார்கள். அந்த சம்பவம் இவ்வாறு நிகழ்ந்தது: அதாவது அன்னாரின் தாயார் அன்னாரிடம் ஒரு நாள் இரவு தமது மற்ற பிள்ளைகளிடமிருந்து மறைந்து இவ்வாறு கூறினார்: நீ இங்கிருந்து சென்று விடு. ஒருபோதும் இங்கு வந்து விடாதே. இல்லையென்றால் உனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்று கூறினார்.

மர்ஹூம் பஞ்சாப் லாஹூர் பல்கலைக்கழகத்திலிருந்து அரபியில் மாஸ்டர்ஸ் செய்திருந்தார்கள். பின்னர் 1958 ஆம் ஆண்டில் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் நுழைந்தார்கள். 1963 ஆம் ஆண்டு ஜாமிஆவிலிருந்து வெளியேறினார்கள். பின்னர் முஃப்தியாக இருந்த மலிக் சயீஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களுடன் இஃப்தா அலுவலகத்தில் அன்னாரின் பணி நியமனம் நிகழ்ந்தது. 1967 ஆம் ஆண்டில் அன்னாரின் பணி மாற்றம் சுருக்கெழுத்துத் துறையில் நிகழ்ந்தது. மவ்லானா முஹம்மத் யாகூப் தாஹிர் சாஹிப் அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அவர்களது இடத்தில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாரை சுருக்கெழுத்துத் துறையில் தம்முடன் வைத்துக் கொண்டார்கள். 1985 வரை அன்னார் சுருக்கெழுத்துத் துறையின் இன்சார்ஜாக இருந்தார்கள். சுருக்கெழுத்துத் துறையில் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்கள், சொற்பொழிவுகள், நிகழ்ச்சிகளின் அறிக்கைகள், சுற்றுப் பயணங்களின் அறிக்கைகள் போன்ற பணிகளை தயார் செய்வது அன்னாரின் பொறுப்பாக இருந்தது.

1978 ஆம் ஆண்டு சிலுவை முறித்தல் மாநாடு லண்டனில் நடைபெற்றது. அதில்

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கலந்து கொண்டார்கள். அதிலும் மர்ஹூம் அவர்கள் ஹுஸூர் அவர்களுடன் இருந்தார். அறிக்கைகள் தயார் செய்தார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஃபஸ்லே உமர் சுய சரிதை தயாரிக்கும் பணியிலும் அன்னாருக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அன்னாரைக் குறித்து மிகவும் நல்ல முறையில் நினைவு கூர்ந்துள்ளார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1983 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, ஃபிஜி, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்போது மலிக் யூசுஃப் சலீம் சாஹிப் அவர்களும் அன்னாருடன் இருந்தார்கள். மேலும் ஹிஜ்ரத்திற்குப் பிறகு குத்பாக்களின் ஆடியோ கேஸட்டுகளின் நகலை தயார் செய்கின்ற பணியையும் அன்னார் மிக அழகிய முறையில் செய்தார்கள். ஏனென்றால் அப்போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க நேரிட்டது. ஃபைஸிலாபாத்தில் ஒருவருடைய வீட்டில் அன்னார் சுயமே ஆடியோ கேசட்டுகளை தயார் செய்து வந்தார்கள். ஆயினும் பின்னர் அதனை திரும்ப எடுத்து வந்தார்கள். சிறிது காலம் மைதானத்திலும் (செயல்களத்திலும்) ஜமாஅத்தின் முரப்பியாக இருந்து வந்தார்கள்.

தாஹிர் ஃபவுண்டேஷனில் குத்பாத்தே தாஹிர் தொடர்பான பணிகளை செய்வதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்துள்ளது. தனிச் செயலர் அலுவலகத்தின் ஷூராவின் நடவடிக்கைகளை எழுதுவதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்துள்ளது.

எவ்வாறிருப்பினும் ஓய்வு பெற்ற பிறகு மீண்டும் பணியமர்த்தப்பட்டு வந்தார்கள். பின்னர் அன்னார் நோயின் காரணமாக 2013 ஆம் ஆண்டில் அனுமதி பெற்றுக் கொண்டார்கள். அன்னார் இரண்டு திருமணம் செய்திருந்தார்கள். அன்னாருக்கு ஒரு மகள் பிறந்தார். அதன் பிறகு அன்னாரின் மனைவி இறந்து விட்டார்கள். பின்னர் இரண்டாவது திருமணம் செய்தார்கள். அதன் மூலம் இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் மகளான குத்ஸியா மஹ்மூத் சர்தார் இவ்வாறு கூறுகின்றார்கள்: எங்களது தந்தை அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்தினார். மேலும் எங்களுக்கும் அதற்கு மிக அதிகமாக அறிவுரை வழங்கினார். மிகவும் கண்டிப்புடன் தொழுகைகளை பேணச் செய்து வந்தார். தாமதமாக தொழும்போது அதிருப்தி அடைவார். தஹஜ்ஜுத் தொழுகையில் மிகவும் மன்றாடி வந்தார். தினமும் ஒரு பாரா திருக்குர்ஆன் ஓதி வந்தார். நோயுற்ற நிலையிலும் தொழுகைக்கான நேரம் ஆகி விட்டதா? இல்லையா? என்று கேட்டு வந்தார்கள். அன்னாருக்கு தொழுகை தொடர்பாக மிகுந்த கவலை இருந்தது. கிலாஃபத்தின் மீதான அன்பையும், கட்டுப்படுதலையும் அன்னார் எங்களிடத்தில் மிகவும் நிரம்பச் செய்து விட்டார்கள். கிலாஃபத்தின் மீது அன்னாருக்கு எல்லையற்ற நேசம் இருந்தது. கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதிலேயே அனைத்து பரக்கத்துகளும் உள்ளன என்று அன்னார் கூறி வந்தார்கள். அஹ்மதிய்யத்திற்காக மிகுந்த கடினங்களை சகித்து வந்தார்கள்.

துணைச் செயலர் ரஷீத் தய்யப் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்தில் மலிக் முஹம்மத் யூசுப் சலீம் சாஹிப் இந்த துறைக்கு வந்து விட்டார்கள். நீண்ட காலம் இந்த துறையில் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். சொற்பொழிவு போன்றவற்றை எழுத்துக்கள் வடிவில் கொண்டு வந்தார்கள். ஜமாஅத் பத்திரிகையான அல்ஃபஸ்லுக்காக அறிக்கைகளை தயார் செய்து வந்தார்கள். மிகவும் பொறுப்புடனும், நிர்வாகத்துடனும், உயர் தரமான வழிமுறைகளுடனும் பணி செய்து வந்தார்கள். அன்னாரின் இலக்கண தரமும் மிகவும் உயர்தரமானதாக இருந்தது.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) மற்றும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆகியோருடன் வெளிநாட்டு குழுக்களுடன் ஐரோப்பா செல்வதற்கு அன்னாருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மிகவும் நுட்பமான பார்வையுடன் அன்னார் பணி செய்து வந்தார்கள். ஒவ்வொரு சொல்லையும் ஆழ்ந்து சிந்தித்து எச்சரிக்கையுடன் எழுதி வந்தார்கள். மேலும் அசல் பொருளிலிருந்து எந்த வித்தியாசமும் வந்து விடக்கூடாது என்று துஆ செய்து எழுதி வந்தார்கள். 2013 ஆம் ஆண்டு அன்னார் ஓய்வு பெற்றபோது அப்போதும் கூட ஷூராவின் அறிக்கைகளை தயார் செய்வதில் சிக்கல் ஏதும் எற்பட்டால் தனிச் செயலர் அலுவலகத்தில் எப்போது அழைக்கப்பட்டாலும் அன்னார் உடனடியாக வந்து விடுவார்கள். நான் இதனை எனது நற்பாக்கியமாக கருதுகின்றேன் என்று எப்போதும் கூறி வந்தார்கள்.

இவர் ஓர் அமைதி நிறைந்த மனிதராகவும், தமது பணியில் மூழ்கி இருந்தவராகவும், தனது வக்ஃபின் உரிமையை வழங்கியவராகவும் இருந்தார். மௌனமாக அனைத்து பணிகளையும் செய்யக்கூடியவராக இருந்தார். எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. மிக எளிமையுடன் வாழக் கூடியவராக இருந்தார். இதுவே எனது உள்ளத்திலும் இவரைப் பற்றிய சிந்தனை ஆகும். அல்லாஹ் இவருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கு அன்னாரது பிள்ளைகளுக்கும் அல்லாஹ் நற்பேறு வழங்குவானாக.

இரண்டாவது குறிப்பு மதிப்பிற்குரிய ஷுஹைப் அஹ்மத் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மர்ஹூம் தர்வேஷ் காதியான் பஷீர் அஹ்மத் சாஹிப் காலா அஃப்கான் அவர்களின் மகனாக இருந்தார்கள். 56 வது வயதில் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1987 ஆம் ஆண்டு ஜமாஅத்திற்கு பணியாற்ற தொடங்கினார்கள். சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு துறைகளில் ஊழியராகவும், அதிகாரியாகவும், நாஸிராகவும் தொண்டாற்றி வந்துள்ளார்கள். உலியா அலுவலகத்தின் இன்சார்ஜ் ஆகவும், சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஆடிட்டர் ஆகவும், நாஸிர் பைத்துல் மார் கர்ச் ஆகவும், நாஸிம் வக்ஃபே ஜதீத் மால் ஆகவும், அஃப்ஸர் ஜல்ஸா ஸாலானா ஆகவும், சத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யா பாரத் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. 33 ஆண்டுகளை விடவும் கூடுதலாக அன்னார் தொண்டாற்றி உள்ளார்கள். இறைவணக்கத்தின் பக்கம் அன்னாருக்கு மிகவும் கவனம் இருந்தது. தஹஜ்ஜுத் தொழுகையையும், நஃபில் தொழுகைகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வந்தார்கள். கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் உயர்ந்த தரமாக இருந்தது. என்ன வழிகாட்டல் வந்தாலும் உடனடியாக செயல்பட வேண்டும் என்று எப்போதும் கூறி வந்தார்கள். ஆழமான திருக்குர்ஆன் ஞானம் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஜமாஅத்தின் கலீஃபாக்களின் புத்தகங்களையும் படித்து வந்தார்கள். மிகவும் பரந்துபட்ட மார்க்க அறிவு இருந்தது. எல்லா தலைப்பிலும் சொற்பொழிவாற்றும் திறமை இருந்தது. மிகவும் நல்லொழுக்கமுடையவராகவும், எல்லோரையும் சந்திக்கும் நபராகவும் இருந்தார்கள். எல்லா தரப்பு மக்களுடனும் அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்ளும் நபராக இருந்தார்கள். ஏழைகளையும், தனக்கு கீழ் பணியாற்றுபவர்களையும் கருத்தில் கொண்டு வந்தார்கள். காதியானில் ஒவ்வொருவரும் இவரை மிகவும் புகழ்கின்றார்கள். மிகுந்த தைரியமும், நன்றியுணர்வும் கொண்டிருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். தமக்குப் பிறகு ஒரு மனைவியையும், இரண்டு மகன்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னார் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானின் தலைவரான ஜலாலுத்தீன் சாஹிப் நய்யர் அவர்களின் மருமகனாக இருந்தார்கள்.

நாஸிர் பைத்துல் மால் ஆமத் ரஃபீக்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

அஹ்மத் பேக் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: அன்னாருடன் 18 ஆண்டுகள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவிலும், ஜல்ஸா ஸாலானா காதியான் அலுவலகத்திலும் தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அன்னார் தனது செயல் முன்மாதிரியின் மூலமாக தொண்டாற்றக்கூடியவர்களை தன்னுடன் அழைத்துச் செல்வார்கள். ஜல்ஸா ஸாலானாவின் நாட்களில் இரவு 3, 4 மணி வரை அலுவலகத்தில் இருப்பார்கள். தங்குமிடங்களை ஆய்வு செய்வார்கள். எங்கேயும் ஏதும் குறை தென்பட்டால் உடனடியாக அங்கு சென்று சரி செய்வார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களை முடிந்தவரை கருத்தில் கொள்வதற்கு எப்போதும் எல்லா ஊழியர்களுக்கும் அறிவுரை வழங்கி வந்தார்கள். ஓர் ஊழியரிடம் தவறு ஏற்பட்டிருந்தால் விருந்தினர்களிடம் தாமே வருத்தம் தெரிவிப்பார்கள்.

அன்னாரின் மைத்துனரும் இவ்வாறு எழுதியுள்ளார்: நான் உலகில் ஒருபோதும் எவரிடத்திலும் பகைமை பாராட்டியதில்லை என்று அன்னார் கூறி வந்தார்கள்.

வகாலத் மால் தஹ்ரீகே ஜதீதின் ஒரு இன்ஸ்பெக்டர் இவ்வாறு எழுதுகின்றார்: கடந்த நாட்களில் இந்தியாவின் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களில் அன்னாரின் நீண்ட ஒரு சுற்றுப் பயணம் இருந்தது. அப்போது நான் நோய்வாய்ப்பட்டு விட்டேன். பெற்றோர் பிள்ளைகளை கவனித்துக் கொள்வது போன்று அன்னார் என்னை கவனித்துக் கொண்டார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் பொறுமை மற்றும் அமைதியை வழங்குவானாக. மேலும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்யும் நற்பேறை வழங்குவானாக.

அடுத்த குறிப்பு மதிப்பிற்குரிய மக்ஸூத் அஹ்மத் சாஹிப் பட்டி முபெல்லிக் காதியான் அவர்களுடையதாகும். அன்னார் 18 மே அன்று 52 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

மர்ஹூம் ஜம்மு காஷ்மீர் மாநிலம், ரஜோரி மாவட்டம், அஹ்மதிய்யா ஜமாஅத் சார்கோட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். 30 வருடங்கள் அன்னார் தொண்டாற்றி வந்தார்கள். லக்னோ மண்டலத்தின் அமீராகவும், சுமார் ஓர் ஆண்டு ஸ்ரீ நகர் முபல்லிக் இன்சார்ஜ் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. 2017 லிருந்து மரணம் வரை முழு நேர தலைமையக காஸியாக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. கஸாவில் மிகவும் உழைப்புடனும், கலப்பற்ற தன்மையுடனும் தமது பணியை ஆற்றி வந்தார்கள். பல்வேறு வழக்குகளில் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகள் குறித்து அன்னாருக்கு மிகவும் கவலை இருந்தது வந்தது. இன்னும் கூறப்போனால், அன்னார் நோயுற்றிருந்தபோது கடந்த நாட்களில் மருத்துவமனையில் இருந்தார்கள். அன்னாருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது. மருத்துவமனையிலும் பணிகளை பற்றி கவலை கொண்டிருந்தார்கள். மிக நல்லியல்பு கொண்டவராகவும், அனைவரிடமும் முக மலர்ச்சியுடன் பழகக்கூடியவராகவும், தைரியசாலியாகவும், விவகாரங்களை புரியக்கூடியவராகவும், சுறுசுறுப்பான வாழ்க்கையை அர்ப்பணித்தவராகவும் இருந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். மர்ஹூம் தமக்குப் பிறகு தாயையும், மூன்று சகோதரர்களையும் ஒரு மனைவியையும், மூன்று மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பெண் பிள்ளைகளை பாதுகாப்பானாக. மேலும் அன்னாரின் நன்மையை தொடரச் செய்யும் நற்பேறை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா, ஜாவீத் இக்பால் சாஹிப் ஃபைஸலாபாத் அவர்களுடையதாகும். அன்னார் 66 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னாரின் மகன் தல்ஹா ஜாவித் சாஹிப் எழுதுகின்றார்: அவர்களின் குடும்பத்தில் அன்னாரின் கொள்ளுத் தாத்தா பாபா சக்கிரா அவர்களின் மூலம் அஹ்மதிய்யத் வந்தது. அன்னார் மாவு அரைக்கின்ற தொழிலை செய்து வந்ததால் அன்னாருடைய பெயருடன் சக்கி என்ற சொல் இணைந்து விட்டது. தெருக்களில் குரல் கொடுத்து தமது பணியை செய்து வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கவிதைகளை மிக உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள். அதன் மூலம் தப்லீக்கின் வழி திறக்க வேண்டும் என்று அவ்வாறு செய்து வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் தொழுகைகளை முறையாக நிறைவேற்றி வந்தது மட்டுமின்றி தஹஜ்ஜுத் தொழுகையையும் தொழக் கூடியவராக இருந்தார்கள். தஹஜ்ஜுத்திற்கான ஏற்பாடு செய்து வந்தார்கள். ஜமாஅத்தாக தொழும்படி குடும்பத்தினருக்கும் அறிவுறுத்தி வந்தார்கள். இன்னும் கூறப்போனால் வீட்டில் ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு செய்வார்கள். திருக்குர்ஆனை தொடர்ந்து ஓதி வந்தார்கள். அத்துடன் மொழியாக்கத்தையும் படித்து வந்தார்கள். குத்பா கேட்பதற்கு சிறப்பான ஏற்பாடு செய்து வந்தார்கள். குடும்பத்தினர் அனைவரையும் தம்முடன் அமர்த்தி MTA வில் குத்பா கேட்டு வந்தார்கள். மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில் பித்துப் பிடித்ததைப் போன்று ஆர்வம் இருந்தது. 84 ஆம் ஆண்டு ஏற்பட்ட சூழலுக்குப் பிறகு ஆடியோ கேஸட்டுகள் மூலம் காலத்தின் கலீஃபாவின் குத்பாக்கள் ஜமாஅத்துகளுக்கு எட்ட வைக்கப்பட்டு வந்தன. அன்னார் அந்த கேஸட்டுகளை பையில் போட்டுக் கொண்டு கிராமம் கிராமமாக சைக்கிளில் சென்று கொடுத்து வந்தார்கள். MTA ஆரம்பமானபோது தமது வீட்டில் DISH ஆண்டனா பொறுத்தினார்கள். மக்களை வீட்டிற்கு அழைத்து குத்பா கேட்கச் செய்து வந்தார்கள். அன்னார் தமக்குப் பிறகு தாயையும், அமத்துல் பாஸித் என்ற மனைவியையும், இரண்டு மகன்களையும், ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த நற்குறிப்பு கானாவின் முரப்பியான நவாஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய மதீஹா நவாஸ் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஏப்ரல் மாதம் 16 ஆம் தேதி 36 வயது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னார் கானாவிலேயே இருந்தார்கள். அங்கு தான் மரணமும் அடைந்துள்ளார்கள். அன்னாரின் கணவர் முரப்பி சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: திருமணமான 16 ஆண்டுகளில் நான் அன்னாரிடம் ஏராளமான நற்பண்புகளை கண்டுள்ளேன். மிகவும் தைரியமிக்க பெண்மணியாகவும், பொறுமை செய்யக்கூடியவராகவும், அனுதாபம் கொண்டவராகவும், தியாக உணர்வுமிக்க பெண்மணியாகவும் அன்னார் இருந்தார்கள். சிறந்த தாயாகவும், நன்றியுணர்வுமிக்க மனைவியாகவும் இருந்தார்கள். கானாவில் எங்கு சந்தர்ப்பம் கிடைத்தாலும் பிள்ளைகளுக்கு வகுப்புகள் நடத்துவார்கள். தமது பிள்ளைகளை அவர்களுடன் அமர்த்தி திருக்குர்ஆன் கற்றுக் கொடுப்பார்கள். மாமியார், மாமனார் உறவுகளுடன் நல்ல முறையில் நடந்து வந்தார்கள். எவருடைய கடும் சொல்லுக்கும் ஒருபோதும் பதிலளிக்க மாட்டார்கள். மாறாக, சகித்துக் கொள்வார்கள். என்னையும் பொறுத்துக் கொள்ளும்படி கூறுவார்கள். மேலும் துஆ செய்யும்படி கூறி வருவார்கள். பிள்ளைகளின் தர்பிய்யத்தில் சிறிய சிறிய விஷயத்தைக் கூட கருத்தில் கொண்டு வந்தார்கள். கிலாஃபத்துடன் தொடர்பு வைப்பதற்காக பெரும்பாலும் பிள்ளைகளுக்கு கிலாஃபத்தின் அருட்களைப் பற்றி எடுத்துரைத்து வந்தார்கள். ஏழைகளை பராமரிக்கக்கூடிய மற்றும் நல்ல பெண்மணியாக இருந்தார்கள்.

தமக்குப் பிறகு கணவரை மட்டுமின்றி 13 வயது ஃபராத் சஃபீ, 8 வயது ஃபைஸியா, 1 வயது கொண்ட ஸுஹ்ரா என்ற மூன்று பெண் குழந்தைகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அனைவரும் மாஷா அல்லாஹ் வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ளனர். அல்லாஹ் அவர்களின் துஆக்களை அவர்களின் பிள்ளைகளுக்கு உரித்தாக்குவானாக. மேலும் அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 08 July 2021 Issue No. 27

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# எதிர்காலத்தில் இந்தியாவின் மொழியாக உருது இருக்கும். வேறு எந்த மொழியும் அதற்கெதிரில் நிற்க முடியாது

وَمَآ اَرْسَلْنَا مِنْ رَّسُوْلٍ اِلَّا بِلِسَانِ قَوْمِهٖ لِيُبَيِّنَ لَهُمْ ۭ فَيُضِلُّ اللّٰهُ مَنْ يَّشَاۗءُ وَيَهْدِيْ مَنْ يَّشَاۗءُ ۭ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா இப்ராஹீம் வசனம் 5ன் விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

اِلَّا بِلِسَانِ قَوْمِهٖ என்பதற்கு சிலர் இவ்வாறு பொருள் செய்துள்ளனர். அதாவது தூதருக்கு அவரது சமுதாய மொழியில் மட்டுமே வஹீ வர வேண்டும் என்று பொருள் கொள்கின்றனர். ஆனால் இது சரியல்ல. அவரது சமுதாய மொழியில் நிச்சயம் வஹீ இருக்க வேண்டும் என்பது சரியாகும். ஏனென்றால் அந்த தூதுச் செய்தியை அவர் தமது சமுதாயத்திற்கே எட்ட வைக்கின்றார். வேறு மொழியில் வஹீ இருக்குமென்றால் அவருடைய தப்லீக் பணிகளில் அவருக்கு கடினம் ஏற்பட்டு விடும். ஆனால் அடையாளம் மற்றும் அற்புதம் என்ற ரீதியில் வேறு மொழியில் இல்ஹாம் வந்தால் அதில் எந்தத் தவறும் இல்லை.

சில மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாம்கள் மீது இந்த வசனத்தை முன் வைத்து ஆட்சேபனை செய்கின்றனர். ஆனால் உள்ளபடியே அரபி மற்றும் உருது மொழியைத் தவிர்த்து வேறு எந்த மொழிகளில் அன்னாருக்கு இல்ஹாம் இறங்கியதோ அது அடையாளம் மற்றும் அற்புதம் என்ற ரீதியிலே ஆகும். அரபி மொழியில் அன்னாருக்கு ஏன் இல்ஹாம் வந்தது என்றால் அது இஸ்லாமிய மார்க்கத்தின் மொழியாகும். மேலும் அதேபோன்று முஸ்லிம்களின் சமுதாய மொழியாகும். உருது மொழியில் ஏன் இறங்கியது என்றால் அன்னாரின் விஷயங்களை முதலில் செவியேற்பவர்கள் உருது மொழி பேசக்கூடியவர்களாக இருந்தார்கள். அன்னாரின் இல்ஹாம்களின் அடிப்படை பகுதி அனைத்தும் ஒன்று அரபியில் இருக்கும். அல்லது உருதுவில் இருக்கும். ஏனைய மொழிகளில் இறங்கிய இல்ஹாமைப் பொருத்தவரை அவையின்றி தப்லீக்கில் தடை ஏற்படும் என்பதில்லை. அது ஒரு கூடுதலான அடையாளம் மற்றும் உதவியாக மட்டுமே உள்ளது.

கிறிஸ்துவர்கள் மற்றும் குறிப்பாக வேரி என்பவர் இந்த வசனத்திலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஆட்சேபனை செய்துள்ளார். வேரி சாஹிப் கூறுகின்றார்: இந்த வசனத்திலிருந்து முஹம்மத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அரபிகளுக்கு மட்டுமே வந்தவர்கள் என்று தெரிய வருகின்றது. ஆனால் அத்துடன் அவர் இவ்வாறும் எழுதுகின்றார். (மற்ற மொழிகளில்) திருக்குர்ஆனின் மொழியாக்கம் ஆகுமானது என்று இவ்வசனத்திலிருந்து நிரூபணமாகின்றது. அன்னாரின் இந்த இரண்டு விஷயங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபிகளுக்காக மட்டுமே தோன்றினார்கள் என்றால் பின்னர் மொழியாக்கத்திற்கான கேள்வி எங்கு எழுகின்றது. ஏனைய சமுதாயங்களுக்கு அன்னாருடன் தொடர்பு இல்லையென்றால் மொழியாக்கம் செய்வதற்கு அவசியம் இல்லை. இந்த வசனத்திலிருந்து மொழியாக்கம் செய்வது ஆகுமானது என்று நிரூபணமாகின்றது என்றால் அன்னாரின் நபித்துவம் ஏனைய சமுதாயங்களுக்கும் அமைந்துள்ளது என்பதும் தெரிய வருகின்றது. இக்கேள்விக்கு உண்மையான பதில் இதுவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபிகளுக்காக தோன்றினார்கள் என்ற பொருள் இந்த வசனத்திற்கு ஒருபோதும் கிடையாது. ஏனென்றால் திருக்குர்ஆனின் ஏனைய இடங்களிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாக நிரூபணமாகின்றது.

இந்த வசனத்திலிருந்து இதுவும் தெரிய வருகின்றது. அதாவது அரபி மொழி அனைத்து மொழிகளின் தாய் ஆகும். ஏனென்றால் அரேபியாவில் தோன்றிய தூதரிடமே முழு உலகத்தின் சீர்திருத்தம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே அரபி மொழியில் இறங்கக்கூடிய வஹீ முழு உலகின் நேர்வழிக்கும் உரியது என்று குறிப்பிடுவதிலிருந்து அரபி மொழி ஏதோவொரு வடிவில் முழு மொழிகளின் தாயாக உள்ளது. மேலும் ஏனைய மொழிகள் அதன் பிள்ளைகளைப் போன்று உள்ளன என்பது நிரூபணமாகிறது.

இந்த வசனத்தில் ஆரியர்களின் இந்த ஆட்சேபனையும் ரத்து செய்யப்படுகின்றது. இறை வசனம் எவரும் பேசாத மொழியில் வர வேண்டும். அப்போதுதான் அது சமத்துவமிக்கதாக இருக்கும் என்று சில ஆரியர்கள் கூறுகின்றனர். ஆனால் திருக்குர்ஆன் கூறுவது என்னவென்றால் மக்கள் பேசுகின்ற மொழியில் வஹீ இருக்க வேண்டும். அப்போது தான் நபி அவர்களுக்கு புரிய வைக்க முடியும். மேலும் அவர்களும் புரிய முடியும்.

உலகம் பேசாத மொழியில், புரியாத மொழியில் இறை வசனம் இறங்குவதன் பயன் தான் என்ன? ஆரியர்களின் இந்த கொள்கை இந்த வகையிலும் தவறாகும். அதாவது வேதம் இறங்கியபோது அந்த காலத்து ரிஷிகள் அதனை அப்போதே புரியவில்லை என்றால் அது இறங்கியது பயனற்றதாகி விடும். அவர்களுக்கு வேதம் புரிய வைக்கப்பட்டிருந்தால் பின்னர் சமத்துவம் இருக்க முடியாது. அப்போது இருந்த மக்களுக்கு புரிய வைக்கப்பட்டிருந்தால் அப்போதைய காலத்து மக்களுக்கு அது சமமாகி இருக்கும். ஆனால் பிற்காலத்தில் பிறந்த மக்களுக்கு சமத்துவம் எங்கே இருக்கும்? இப்போது பண்டிதர்களும் கூட வேதத்தின் மொழியிலிருந்து விலகி வருகின்றார்கள்.

ஏனென்றால் இக்காலத்தின் தூதரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அரபி மொழிக்குப் பிறகு உருது மொழியில் மிக அதிகமாக இல்ஹாம் இறங்கியுள்ளது. இந்த வசனத்தை கருத்தில் கொண்டவாறு எதிர்காலத்தில் உருது மொழி இந்தியாவின் மொழியாக இருக்கும். மேலும் ஏனைய எந்த மொழியும் அதற்கெதிரில் நிற்க முடியாது என்று நான் கருதுகின்றேன். لِيُبَيِّنَ لَهُمْ என்பதற்குப் பிறகு يُضِلُّ اللّٰهُ என்று கூறி இறைவன் இந்த விஷயத்தை சுட்டிக் காட்டியுள்ளான். அதாவது புரிவதற்கு முழுமையான ஏற்பாடுகள் இல்லாதபோது அல்லாஹ் எவரையும் வழிகேடராக குறிப்பிடுவதில்லை. முதலில் புரிய வைக்கப்பட்ட பிறகு தான் எப்போதும் ஆட்சேபனை என்பது நிலைபெற முடியும். எனவே (தூதுச் செய்தி) தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட பிறகு தான் வழிகேடு குறித்து தீர்ப்பு வழங்க முடியும். ஒரு சமுதாயத்திற்கு ஒன்றை குறித்து உறுதியான அறிவு கிடைக்காதவரை ஏற்றுக் கொள்ளாததன் காரணமாக அவர்களுக்கு தண்டனை வழங்க முடியாது என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

இந்த இடத்தில் கைர் முபாயிகள் சார்பாக நம்மீது செய்யப்படும் ஆட்சேபனைகளையும் நான் நீக்க விரும்புகின்றேன். ஒருவகையில் நாம் எல்லா நபரையும் தண்டனைக்குரியவராக கருதுவதாக அவர்கள் கூறுகின்றனர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் அவர்களை சென்றடைந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரியே. இது தவறான ஆட்சேபனை ஆகும். இது எப்படி நமது கொள்கையாக இருக்க முடியும்? ஏனென்றால் திருக்குர்ஆன் மிகத் தெளிவாக வெளிப்படுத்தி விட்டது. அதாவது தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட பிறகு தான் அழிவிற்கான ஃபத்வா வழங்கப்பட முடியும்.

وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ அவன் மேன்மைமிக்கவன்; தண்டனை வழங்க முடியும். ஆயினும் நுட்பமான ஞானமிக்கவன். எனவே தண்டனைக்கான காரணம் இல்லாத வரை அவன் தண்டனை வழங்குவதில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 3 பக்கம் 4242– 444)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad